Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## ஸத்திய தரிசனம்.

மகாத்மா காந்தி ஜீவிய சரித்திரம்.

### பாகம் 4 அத்தியாயம் 18.

பிளேக் நோய் எழும் இந்தியர்களிடம் என்னுடைய செல்வாக்கை அதிகரித்தது. என்னுடைய தொழில் அபிவிருத்தி யடைந்ததோடு என் பொறுப்பும் அதிகரித்தது. சில ஐரோப்பியர்களோடு நெருங்கிய சம்பந்தம் ஏற்பட்டதால் அவர்கள் எனக்குச் சில உதவிகள் புரிந்தனர். சைவ உணவு போஜன விடுதியில் ஸ்ரீ போலாக்கும் ஸ்ரீ வெஸ்ட்டும் எனக்கு பழக்கமானவர்கள். ஒரு நாள் போஜன விடுதியில் நான் சாப்பிட்டுக்கொண்டிருக்கும் பொழுது தூரத்தில் ஒரு மேஜையருகில் உட்கார்ந்து சாப்பிட்டுக்கொண்டிருந்த ஒரு வாலிபர் தன்னுடைய விலாசமடங்கிய சீட்டை அனுப்பி தான் என்னுடன் பேச விரும்புவதாகத் தெரிவித்தார். நான் உடனே அவரை என்னுடைய மேஜைக்கழைத்தேன். என்னுடைய அழைப்பிற் கிணங்கி என் மேஜைக்கு வந்து சேர்ந்தார். அவர் என்னிடம் "நான் 'கிரிடிக்' பத்திரிகையில் உதவியாசிரியன். பிளேக் நோயைப்பற்றி நீங்கள் பத்திரிகைகளுக்கு எழுதியிருந்த விஷயங்களைப் படித்ததும் உங்களைப் பார்க்கவேண்டுமென்ற அவா எனக்கு மிகுந்துவிட்டது. இச் சந்தர்ப்பத்தில் உங்களைச் சந்தித்ததைக் குறித்து நான் அதிக சந்தோஷமடைகிறேன்" என்றார்.

ஸ்ரீ. போலாக்கின் கபடமற்ற போக்கு என்னைக் கவர்ந்துவிட்டது. அன்று மாலையில் ஒருவரைப்பற்றி மற்றொருவர் தெளிவாக அறிந்துகொண்டோம். வாழ்க்கையில் நான் எக்கருத்தை முக்கியமாகக் கொண்டிருக்கிறேனோ அதையே அவரும் கொண்டிருந்தார். அவருக்கு எளிய வாழ்க்கையில் தான் அதிக விருப்பம். தமதுடைய அறிவிற்கு எது அவசியமெனத் தோன்றுகிறதோ அதை அநுபவ பூர்வமாக நடத்திக் காட்ட வேண்டுமென்னும் விருப்பம் அவருக்கு மிகுந்துமுண்டு. அவர் தமது வாழ்க்கையிலும் பல மாறுதல்களைச் செய்துகொண்டிருந்தார்.

#### ஸ்ரீ. வெஸ்ட்டும் பத்திரிகை லாபமும்.

"இந்தியன் ஒப்பீனியன்" பத்திரிகையை நடத்துவதில் நாளுக்கு நாள் செலவு அதிகரித்துக்கொண்டேவந்தது. ஸ்ரீ. வெஸ்ட்டினிடமிருந்து கிடைத்த முதல் கடிதமே திடுக்கிடச்செய்வதாயிருந்தது. அவர் எழுதியதாவது:—"நீங்கள் லாபம் வருமென்று கருதியிருக்கிறீர்கள். ஆனால் அத்தகைய லாபமொன்றும் வருமென்று எனக்குத் தோன்றவில்லை. நஷ்டம் வருமோ என்பதைக் குறித்துதான் எனக்கு பயமாயிருக்கிறது. கணக்குப் புத்தகங்களில் வரவு செலவு ஒழுங்காயில்லை. வரவேண்டிய தொகையோ ஏராளமாயிருக்கிறது. எனக்கு தற்சமயம் தலையும் வாலும் புரியாததாயிருப்பதால் அதை முழுதும் பரிசோதித்து புதுப்பிக்கவேண்டியது அவசியம். ஆனால் இவைகளைக் கண்டு நீங்கள் பயந்துவிட வேண்டாம். என்னால் கூடுமானவரையில் எல்லாவற்றையும் ஒழுங்கு செய்ய முயற்சிக்கிறேன். லாபம் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, நான் இங்கேயேதான் இருப்பேன்."

எப்பொழுது லாபம் கிடைக்காதென்று தெரிந்ததோ உடனே தம் வேலையை விட்டு வெளி வந்திருக்கலாம். ஆனால் அவர் அவ்விதம் செய்துவிட்டால் அதற்காக நான் அவர் மீது குற்றம் கூறப்போவதில்லை. நான் அப்பத்திரிகையால் உண்மையில் லாபமுண்டாகுமா வென்பதை நன்றாய் அறியாது கொள்ளாமல் லாபம் கிடைக்குமென்று அவரிடம் கூறிவிட்டேன். ஆகையால் என்மீது நம்பிக்கை கட்டவில்லை எனச் சொல்லவும் அவருக்கு உரிமையுண்டு. ஆனால் அதைப்பற்றி அவர் ஒன்றும் குறை கூறவில்லை. ஆனால் ஸ்ரீ வெஸ்ட் நான் கூறியது பொய்யானவைக் குறித்து அறிந்துகொண்டதும் என்னைக் கேவலமாக நினைத்திருப்பாரென்ற எண்ணமே எனக்குண்டாயிற்று. ஸ்ரீ மதனஜித் என்னிடம் கூறியதை ஆதாரமாகக் கொண்டே ஸ்ரீ வெஸ்ட்டிடம் லாபம் வருமென்று கூறிவிட்டேன். பொது ஊழியர்கள் பிறர் கூறுவதை மதித்து நம்பிக்கொண்டு தான் நேரில் கண்டறியாததை உண்மையென்று மதிப்பது தவறு என்பதை நான் அறிந்துகொண்டேன். ஆகையால் உண்மையின் அர்ச்சிக்கையோடிருப்பதுதான் எல்லாவற்றிலும் முக்கியமானது. நாம் நேரில் தெரிந்துகொள்ளாததோர் விஷயத்தைப் பிறர் நம்பும்படி செய்வது உண்மைக்கு மாறுபாடானதாகும். உண்மையையே என்றும் பின்பற்றி நடக்கவேண்டுமென்பது எனது அளவற்ற ஆசை. அவ்விஷயத்திலும் நான் தவறி நடந்துவிட்டதை ஒப்புக்கொள்ள எனக்கு அதிக வருத்தமாயிருந்தது. வெளியிலிருக்கும் அந்த ஆசையால் எனக்கு ஏற்பட்ட தொந்தரவைவிட எனது சகாக்களுக்குத்தான் அதிக தொந்தரவு ஏற்பட்டது.

#### வாழ்க்கையை மாற்றிய புத்தகம்.

ஸ்ரீ வெஸ்ட்டின் கடிதம் கிடைத்ததும் நான் நேட்டாலுக்குப் புறப்பட்டேன். ஸ்ரீ. போலாக்கிடம் நான் அதிக நம்பிக்கையும் விஸ்வாசமும் கொண்டுவிட்டேன். என்னை வழியனுப்புவதற்காக ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்திருந்தார். ரஸ்கின் எழுதிய "கடைசி வரையில்" என்ற புஸ்தகத்தை அவர் என் கையில் கொடுத்து "நீங்கள் பிரயாணத்தில் இப்புத்தகத்தைப் படியுங்கள். உங்களுக்கு இப்புத்தகம் படிக்கப் பிரியமாயிருக்குமென்று நம்புகிறேன்" என்றார். அப்புத்தகத்தைப் படிக்க ஆரம்பித்ததும் கீழே வைக்க மனம் வரவில்லை. அப்புத்தகம் என்னை முழுதும் கவர்ந்துவிட்டது. ஜோகன்ஸ்பர்கிலிருந்து நேட்டாலுக்கும் 24 மணி நேரம் பிரயாணம். வண்டி மாலையில் டர்பானுக்குப் போய்ச் சேர்ந்தது. அன்று முழுதும் எனக்குத் தூக்கமே வரவில்லை. புத்தகத்தின் ஒளியில் என்னுடைய வாழ்க்கையை மாற்றிக்கொள்ள முடிவு செய்துகொண்டேன். ரஸ்கின் எழுதிய புத்தகங்களில் அதற்கு முன் ஒன்றையாவது நான் படித்ததில்லை. நான் பள்ளிக்கூடத்தில் படித்து வந்த காலத்தில் பாட புத்தகங்களைத் தவிர வேறு ஒன்றையுமே நான் படித்ததில்லை. பிறகு நான் வாழ்க்கையில் புகுந்ததும் எனக்குப் படிக்கப்போதிய காலமே கிடைப்பது அரிதாகிவிட்டது. ஆகையால் பல புத்தகங்களைப் படித்து அறிவு பெற்றிருக்கிறேனென்று சொல்லுதற்கில்லை. இவ்விதம் அதிகம் படிக்காதிருந்ததால் எனக்கு அதிக கஷ்டமேற்பட்டிருப்பதாக எனக்குத் தோற்றவில்லை. அதற்கு நேர்மாறாக உண்மையில் எனக்கு நன்மைதான் ஏற்பட்டது. ஏனெனில் நான் சில புத்தகங்களையே படிக்க முடிந்ததாகையால் அவற்றை நன்கு ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவும், அவற்றை அநுபவத்தில் காட்ட முயற்சிக்கவும் எனக்கு சௌகரியங்கள் ஏற்பட்டன. நான் படித்த புத்தகங்களிலெல்லாம் எனது வாழ்க்கையில் திடீரென்று பல மாறுதல்களைச் செய்த புத்தகம் "கடைசிவரையில்" தான். பிற்காலத்தில் அப்புத்தகத்தை "சர்வோதயம்" என்ற பெயரோடு நான் குஜராத்தியில் மொழி பெயர்த்தேன். என்னுடைய மனதில் ஆழ்ந்து கிடந்த சில விஷயங்கள் அப்புத்தகத்தில் பொதிந்து கிடப்பதைக் கண்டேன். அப்புத்தகம் என்னுடைய மனது முழுமையும் கவர்ந்ததற்கும், எனது வாழ்க்கையில் பல மாறுதல்களைச் செய்ததற்கும் அதுவே காரணம். மனிதர்களுக்குள்ளின் மனதிலிருப்பதை வெளியில் கொணர்ந்து வர்ணிக்கிறோரோ அவரே கவி. கவிகள் இவ்விஷயத்தில் எல்லோரும் சமமாக இல்லாததினால் தான் சிலர் செல்வாக்கை அதிகமாக அடைவதில்லை.

அப் புத்தகம் போதிப்பவைகளிலிருந்து நான் தெரிந்துகொள்ளுவதாவது:—

1. ஒரு தனி மனிதனிடம் இருக்கும் நன்மையே எல்லோரிடத்திலும் நன்மையானதாக இருக்கிறது.

2. அம்பட்டனும் வக்கீலும் ஒரே மாதிரியான் வாழ்க்கையை நடத்த சம்பாதிப்பதில் முயன்று வருகிறார்கள். ஆகையால் இருவருடைய உழைப்பும் ஒரே கௌரவத்தையே கொண்டிருக்கிறது.

3 பூமியைப் பயிரிடுவோரும், கைத்தொழிலாளர்களும் நடத்தும் வாழ்க்கையும் செய்யும் ஊழியமுமே சிறந்ததாகும்.

அவற்றுள் முதலில் கூறியதை நான் நன்கு அறிவேன். இரண்டாவது கூறியதைப்பற்றியும் நான் கொஞ்சம் உணர்ந்திருக்கிறேன். மூன்றாவது கூறிய விஷயம் எனக்கு வாய்க்கவேயில்லை. முதலில் கூறியதில் இரண்டாவதாகவும் மூன்றாவதாகவும் கூறியிருக்கும் விஷயம் அடங்கியிருக்கிறதென்பதை அப்புத்தகம் வெட்ட வெளிச்சமாக எனக்கு எடுத்துக்காட்டிற்று. ஆகையால் நான் அவைகளை வாழ்க்கையில் அநுபவ பூர்வமாக நடத்திக்காட்ட முயற்சித்தேன்.

### பாகம் 4 அத்தியாயம் 19.

ரஸ்கினின் "கடைசி வரையில" என்ற புஸ்தகத்தைப் படித்த பின், அப்புஸ்தகம் என்னை எவ்வளவு கவர்ந்து விட்டதென்பதை ஸ்ரீ. வெஸ்ட்டிடம் நான் சொல்லி, அதில் கூறியவற்றை அநுபவத்தில் அநுஷ்டிக்கப் போவதாகத் தெரிவித்தேன். "இந்தியன் ஒப்பீனியன்" பத்திரிகையை ஒரு கிராமத்துக்கு மாற்றி, அங்கு கொஞ்சம் பூமி வாங்கி, அந்தப் பூமியிலேயே சகல வேலையும் செய்துகொண்டு ஓய்வு நேரத்தில் பத்திரிகையையும், அச்சுக் கூடத்தையும் கவனித்துக்கொள்ளக் கூடியவர்களை நியமிக்க வேண்டுமென்று தீர்மானித்தோம். ஜாதி, நிற பேதமின்றி இந்தப் பண்ணையில் வேலை செய்கிறவர்கள் எல்லோருக்கும் மாதம் 3 பவுன் வீதம் ஜீவனோபாயத்தை நடத்தக் கொடுப்பதென்று முடிவு செய்யப்பட்டது.

ஆனால் அச்சுக் கூடத்தில் வேலை செய்த பத்துப்பன்னிரண்டு பேர்களும் இராமாதிரி காட்டுப் புறத்தில் ஒரு பண்ணையில் வந்து வேலை செய்ய சம்மதிப்பார்களா என்பது சந்தேகம். வெறும் சாப்பாட்டுக்கு மட்டும் போதிய சம்பளம் பெற்றுக் கொண்டு தியாக புத்தியுடன் எல்லோரும் உழைக்க வேண்டுமே. எனவே, இந்தத் திட்டத்திற்கு உடன்பட முடியாதவர்கள் முன்போலவே சம்பளம் பெற்றுக்கொண்டிருந்து, காலகடவில் இந்தத் திட்டத்திற்கு உள்ளாக முயல வேண்டுமென்று நாங்கள் ஏற்பாடு செய்தோம்.

இந்த யோசனையை பத்திரிகையை நடத்திய [illegible]ளிடம் தெரிவித்தேன். ஸ்ரீ. மதன்ஜீத் இது சுத்தப் பைத்தியகாரத் தனமென்று சொன்னார். தன் முழு கவனத்தையும் செலுத்தி உழைத்து வரும் பத்திரிகையை வீணாய் நான் கெடுத்துவிடப் போகிறேனென்றும், வேலை செய்பவர்களெல்லாம் இந்த விசித்திர யோசனையைக் கேட்டு ஓடிப் போய்விடுவார்களென்றும், அச்சுக் கூடத்தை மூடிவிட வேண்டியதுதானென்றும் அவர் பயப்பட்டார்.

அச்சுக் கூடத்தில் என்னுடைய பந்து சகன்லால் காந்தி என்பவரும் வேலை செய்துகொண்டு வந்தார். நான் ஸ்ரீ. வெஸ்ட்டிடம் இவ்விஷயமாய்ப் பேசிய போது அவரிடமும் இதைக் குறித்துப் பேசினேன். அவருடன் அவர் மனைவியும் குழந்தைகளும் இருந்தனர். ஆனால் குழந்தைப் பருவமுதல் என் சொற்படியே நடந்து என்னைப் பின்பற்றியே அவர் நடந்து வந்தார். என்னிடம் அவருக்கு பூர்ண நம்பிக்கையுண்டு. எனவே, நான் சொன்ன வார்த்தைக்கு அன்னியமாக இரண்டாவது வார்த்தை பேசாமல் என்னுடைய யோசனையை அவர் ஒப்புக்கொண்டார். அன்று முதல் என்னுடனேயே அவர் இருந்து உழைத்து வருகிறார். "மெஷின்" வேலை செய்த கோவிந்தசாமி என்பவரும் உடன்பட்டார். மற்றவர்கள் என் திட்டத்தை அங்கீகரிக்கவில்லை. ஆனாலும் அச்சுக்கூடத்தை எங்கு மாற்றினாலும் அங்கு வந்து வேலை செய்யத் தயாராயிருப்பதாகச் சொன்னார்கள்.

இது விஷயமான தகவல்களை எல்லாம் பேசிமுடிக்க இரண்டு நாள் கூட செல்லவில்லை. உடனே டர்பானுக்குப் பக்கத்தில் ஏதாவது ஒரு ரயில்வே ஸ்டேஷனுக்குப் பக்கமாக கொஞ்சம் பூமி தேவை யென்று விளம்பரஞ் செய்தேன். 'பீனிக்ஸ்' என்ற இடத்தில் ஒரு நிலம் விற்கத் தயாராயிருப்பதாக அறிவித்தார். நானும் ஸ்ரீ. வெஸ்ட்டுமாக அதைப்போய்ப் பார்த்துவிட்டு வந்தோம். ஒரு வாரத்துக்குள் எல்லா விவரங்களையும் பேசி முடித்து 20 ஏக்கர் பூமியை வாங்கிவிட்டோம். அந்தப் பண்ணையில் நல்ல நீர்தரக் கூடிய ஊற்று இருந்தது. சில மாமரங்களும், ஆரஞ்சி மரங்களுமிருந்தன. அதற்குப் பக்கத்தில் 80 ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலமொன்றுமிருந்தது. அதில் பழ விருட்சங்கள் நிரம்பி இருந்தன. ஒரு இடிந்து போன குடிசையுமிருந்தது. இந்த நிலத்தையும் விலைக்கு வாங்கினோம். இந்த 100 ஏக்கர் பூமிக்கும் மொத்தம் 1000 பவுன் விலை கொடுத்தோம்.

இந்த மாதிரி திட்டங்களிலெல்லாம் காலஞ் சென்ற ஸ்ரீ. ருஸ்டோம்ஜி எனக்குப் பேருதவி யளித்து வந்தார். அவருக்கு இந்த யோசனை மிகவும் பிடித்தது. அவர் இரும்புத் தகடுகளும், இன்னும் கட்டட சாமான்களும் கொடுத்து உதவினார். இவைகளைக் கொண்டு நாங்கள் வேலை ஆரம்பித்தோம். என்னுடன் போயர் யுத்தத்தில் வேலை செய்த சில இந்திய தச்சர்களும், கொத்தர்களும் உழைத்து அச்சுக்கூடத்திற்கு ஒரு கட்டடம் கட்டித் தந்தார்கள். 75 அடி நீளமும், 50 அகலமும் கொண்ட இந்தக் கட்டடம் ஒரு மாதத்தில் தீர்ந்தது.

ஸ்ரீ. வெஸ்ட்டும், மற்றவர்களும் சிரமத்தையும், தங்களுக்கு நேரக்கூடிய ஆபத்தையும் கவனியாமல் தச்சர்களுடனும், கொத்து வேலைக்காரர்களுடனும் இருந்து மேற்பார்வை பார்த்தார்கள். இந்த நிலத்தில் முன்னர் ஒருவரும் வசிக்காமல், புல் வளரும்படி விட்டிருந்ததால் பாம்புகள் அடைந்திருந்தன. ஜனங்கள் வசிப்பதற்கே ஆபத்தாயிருந்தது. முதலில் நாங்கள் கூடாரம் அடித்துக் கொண்டு அதற்குள் வசித்தோம். ஒரு மாதத்தில் கட்டடம் தயாரான பின் அச்சுக்கூட சாமான்களை யெல்லாம் வண்டிகளிலேற்றி ஒரு வாரத்துக்குள் கொண்டு வந்து சேர்த்தோம். டர்பான் நகரிலிருந்து எங்கள் பண்ணை 13 மைல் தூரமிருந்தது. பீனிக்ஸ் ஸ்டேஷனுக்கும், எங்கள் பண்ணைக்கும் 2½ மைல்.

ஒரு வாரத்துக்கு மட்டும் பத்திரிகையை வெளியில் "மெர்க்குரி" அச்சுக் கூடத்தில் அச்சிட வேண்டியிருந்தது.

இந்தியாவிலிருந்து தென்னாப்பிரிக்காவுக்குப் பொருள் தேட வந்திருந்த என்னுடைய நண்பர்களையும், உறவினர்களையும், 'பீனிக்ஸ்' பண்ணைக்கு வந்து குடியேறும்படி நான் தூண்டினேன். அவர்களெல்லாம் வெவ்வேறு தொழில்கள் பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்கள் எல்லாம் திரவியம் தேட வந்திருந்ததால், என்னுடன் வந்து வசிக்குமாறு அவர்களைத் திருப்புவது எளிதாயில்லை; ஆனால் சிலர் உடன்பட்டார்கள். இவர்களில் மகன்லால் காந்தி பேரை மட்டும்தான் நான் குறிப்பிடுகிறேன். மற்றவர்களெல்லாம் சங்கம், தங்கள் தொழிலுக்குத் திரும்பிவிட்டார்கள். மகன்லாலோ தன்னுடைய தொழிலை அறவே யொழித்துவிட்டு என்னுடன் கூடவே நின்று உழைக்க மனப்பூர்வமாய் இறங்கினார். அவர் திறமையாலும், தியாகத்தாலும், பக்தியாலும், இன்றையதினம் என் கொள்கைகளை ஏற்று தொண்டு புரிபவர்களில் அவர் முதன்மைபெற்று விளங்குகிறார். அவர் கைத்தொழில் வேலையில் மிகத் திறமைபெற்றுள்ளார். அது தவிரவும் அவர் தானாகவே கற்றுக் கொண்டது.

இவ்வாறு 1904 ம் ஆண்டில் பீனிக்ஸ் பண்ணை ஸ்தாபிக்கப்பட்டது. எவ்வளவோ இடையூறுகள் நேர்ந்தும் அவ்வளவுக்கும் சமாளித்துக்கொண்டு காலக்கிரம் அங்கிருந்தே "இந்தியன் ஒப்பீனியன்" பிரசுரமாகிறது.

முதலில் ஏற்பட்ட கஷ்டங்களையும், பின்னர் ஏற்பட்ட மாறுதல்களையும், எங்களுக்கு நேர்ந்த ஏமாற்றங்களையும், சம்பவங்களையும் குறித்து அடுத்த அத்தியாயத்தில் கூறுகிறேன்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



# தமிழ் நாட்டில் மகாத்மா காந்தியடிகள்.

## ஜாதி, தீண்டாமையைப் பற்றி காந்தியடிகள் அபிப்பிராயம்.

## நாடார்களைப் பற்றிய பிரஸ்தாபம்.

(கீழ்கண்ட ஊர்களில் கூடிய பொதுக்கூட்டங்களில் ஸ்ரீ காந்தியடிகள் பின்வருமாறு எடுத்துரைத்தனர்.)

### இராஜபாளையம்.

நான் நேற்றையதினம் விருதுநகரில் சில நாடார் நண்பர்களுடன் சம்பாஷித்துக் கொண்டிருந்தேன். அவர்கள் தனித்து வியாபாரத் துறையில் இறங்குகின்றவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் செல்வத்தில் சிறந்து விளங்குகின்றார்கள். அவர் சோர்தியானதாயும் சுதந்தரமானதாயும் உள்ள குணங்கள் தங்களிடம் ஏற்படும்படி செய்து கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் எல்லா வகுப்புப் பையன்களுக்கும் இலவசமாகக் கல்வி கற்பிக்கும் ஹைஸ்கூலை அவர்கள் தங்கள் செலவில் மிக்க நன்றாக நடத்தி வருகின்றார்கள். அவர்களுடைய கோவில்களும் எல்லோருக்கும் பொதுவானவைகளாக இருக்கின்றன. அவர்கள் பொதுஜனங்களுக்கு உபயோகப்படக்கூடிய தோட்டங்களையும் ஏற்படுத்தியிருக்கின்றனர். இவற்றை எல்லாம் நீங்கள் எல்லோரும் பின்பற்றி நடக்கலாம். சுத்தமாக வாழும் இவர்கள் மதுரை திருநெல்வேலி ஜில்லாக் கோயில்களில் பிரவேசிக்கக்கூடாதென்று தடுக்கப்பட்டிருப்பதைக் கேட்டு நான் மிகுந்த ஆச்சர்யமும் வருத்தமும் அடைந்தேன். நான் உண்மையென்று தெரிந்ததும் எனது ஹிந்துமதத்தைக் குறித்து வெட்கமடைந்தேன். மதுரைக்கு 3 முறை சென்றிருக்கிறேன். இப்படியிருந்தும் அங்குள்ள பெரிய கோவிலுக்குள் செல்ல என்னால் இயலவில்லை. இந்த விருத்தாந்தத்தைக் கேள்விப்பட்டது அக்கோயிலுக்குள் கால் அடிவைக்காதிருந்தது எனது பாக்கியமென்றும் நான் கருதினேன். நான் எந்தக் கோயிலுக்குச் சென்றாலும் தீண்டத்தகாதவரெனப் பலரை விடப்படவில்லையென்று கேள்விப்பட்டால் எனக்கு அது மிகுந்த வருத்தத்தையும் வெட்கத்தையும் உண்டாக்குவதுண்டு. எனக்கும் நாயடிக்கும் எவ்வித வித்தியாசமும் இல்லையென்று நான் கருதுகின்றேன். நாயாடி அனுபவிக்காத எந்த உரிமையையும் நான் அனுபவிக்க விரும்பவில்லை. நான் இன்னும் தெற்கே போனால் என்னை நாயாடி என்று அழைத்துக்கொள்ளுவதில் நான் சந்தோஷப்படுகின்றேன். இருந்தபோதிலும் வழக்கத்தின் பலனாக தீண்டத்தகாதவர்கள், நெருங்கத்தகாதவர்கள், பார்க்கத்தகாதவர்கள் முதலியவர்கள் கோயில்களெனப் படுகின்றவற்றுள் உள்ளே விடப்படவேயில்லை என்பதை உணருகின்றேன். தெய்வத்தின் திருக்கோவில்களுள் இவர்களை நுழைய வொட்டாமல் தடுப்பதற்குச் சற்றும் நியாயமே இல்லை. ஆனால் நாடார்கள் சம்பந்தமாக உள்ள இந்தத் தடையின் காரணத்தை நான் அறிந்து கொள்ள முடியவில்லை. இத்தடையானது நம் சமூகத்தை உள்ளூர அரித்துச் செல்லும் நோய்க்கு ஒரு அறிகுறியாகவே இருக்கின்றது. தீண்டாமை ஜாதி இவற்றால் தான் இத்தடை ஏற்பட்டிருக்கிறது. நாம் தீண்டாமை, ஜாதி இவற்றை ஒழிக்கவேண்டிய காலம் வந்துவிட்டது. தீண்டாமை அல்லது ஜாதி இவற்றுடன் வருணாச்சிரமத்தைக் கலந்து அதன் கௌரவத்தைக் குறைக்காதீர்கள். நான் கருதுகின்ற வருணாச்சிரமத்திற்கும் தற்பொழுதுள்ள தீண்டாமை, ஜாதிப்பாகுபாடு ஆகிய முறைகளுக்கும் எவ்விதத்திலும் சம்பந்தம் கிடையாது. ஏற்றத்தாழ்விற்கும் வருணத்திற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது. மானிட சுகத்திற்கு முக்கியமாக இருக்கும் திட்டமான விதியை அங்கீகரிப்பதே வருணமெனப்படும். நாம் நமது மூதாதைகளிடமிருந்து பெறும் ஏற்கு ணங்களையும் தன்மைகளையும் போற்றிப் பாதுகாப்பதே வருணமென்பதின் அர்த்தமாகும். ஒவ்வொருவரும் தமது தகப்பனாருடைய தொழிலை, அது ஒழுக்கஹீனமானதாக இல்லாதிருக்கும் வரை, பின்பற்றி நடக்கவேண்டுமென்பதே வருணத்தின் அர்த்தமாகும். கடவுளைத் தொழுவதற்காகவே மானிடப் பிறவி ஏற்பட்டதாக நம்புகின்றவர் எவரும் தாம் புதிய தொழில்களைக் கண்டு பிடிப்பதில் தமது காலத்தை வீணாக்கவிட்டால் தமது வாழ்க்கையின் இலக்ஷியத்தைப் பூர்த்தி செய்து கொள்ள முடியும் என்பதை உணரவேண்டும். அதனால் ஜாதிப்பாகுபாட்டு முறைக்கும் வருணத்திற்கும் எவ்வித சம்பந்தமுமில்லை என்பதை நீங்கள் காண்பீர்கள். ஆதலால் நீங்கள் தீண்டாமை ஜாதி, இவற்றை ஒழிப்பதற்காகக் கச்சை கட்டிக்கொண்டு போராடவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன். நீங்கள் ஒவ்வொருவரும் கோயில்கள் சகல ஜாதியாருக்கும் பொதுவானதாகும்படி செய்ய உங்கள் செல்வாக்கனைத்தையும் உபயோகிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன். நமது கோயில்களுக்குள் எவரேனும் ஒருவர் வரக்கூடாதென்று நாம் தடுத்தால் அப்போது, நாம் கடவுளை தீண்டத்தகாதவராக்குகின்றோம் என்பதை நாம் மறக்கவர்களாகிறோம்.

ஃ ஃ ஃ

### திருநெல்வேலி.

8-10-27.

தீண்டாமை என்னும் சாபம் புகுந்து ஹிந்து மதத்தையே கெடுத்துவிட்டதென்று நான் உறுதியாக நம்புகின்றேன்.

தீண்டாமைக்கு ஒரு வகுப்பார் மற்றொரு வகுப்பினரைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் என்று கருதும் இறுமாப்பே காரணமாகும். நாம் உயர்ந்த ஜாதி என்று கொண்டாடும் கேட்டை ஒழிக்க முயன்று அதில் வெற்றியுற்றுவிட்டால் நம் முன் போராடக்காரணமே இராது. ஆதலால் தீண்டாமையை அதன் சகலவிதமான அம்சங்களிலும் ஒழிக்க முயலும் எனக்கு நீங்கள் உதவி செய்ய விரும்புகின்றேன். உங்கள் முனிசிபல் பள்ளிக்கூடங்கள் தீண்டாதவர்களுக்கும் பொதுவானவை என்பதைக்கேட்டு நான் சந்தோஷிக்கின்றேன். நீங்கள் அதனுடன் திருப்தியைக் கூடாது. தீண்டாமை உண்மையாக ஒழிந்தால் உயர்ந்த பிராமணர்கள் செல்லக்கூடிய கர்ப்பக்கிரஹத்திற்குள்ளும் செல்ல தீண்டாதவர்களுக்கு உரிமையிருக்கும். தீண்டத்தகாதவர் வசிக்கும் சேரிகள் என்ற தனி இடங்களும் ஒழியும். தீண்டாமை ஒழிந்தால் அவர்களுக்கு மற்றவர்களுக்கிருப்பது போல பொதுக் கிணறுகளையும் உபயோகித்துக்கொள்ள உரிமையிருக்கும். அப்பொழுது ஜாதிவாரியாகக் குளங்கள் இருக்கமாட்டா. பகவத்கீதையில் கடவுள் தமக்குப் பிராமணனும் பங்கியும் (குப்பைவாரி) ஒன்றுதான் என்று கூறியுள்ளார். ஆத்மார்த்திகத்துறையில் விசேஷ முன்னேற்றமடைந்தவர்களுக்கே இது பொருந்துமென்று சில படித்தவர்கள் கூறுகின்றார்கள். அம்மாதிரி தப்பபிப்பிராயப் படுத்திக்கொள்ள இடமே இல்லை. தீண்டாமை ஒழிந்தால் நான் இனிக் கூறப்போகும் விஷயங்களுக்கு இடமே கிடையாது. நாம் தீண்டாமையால்தான் நமது சொந்த சுகாதாரத்தைக் கூடக் கவனிப்பதில்லை. மலம் எடுப்பது தோட்டிகள் வேலையென்று கருதுகின்றோம். அவர்கள் எப்படி வேலை செய்கின்றார்களென்றும் கவனிப்பதில்லை. சுகாதாரவிதிகளைப் பற்றி கட்ட அவர்களுக்கு எடுத்துரைப்பதில்லை. இதனால் அவர்கள் சுத்தி செய்த பிறகும் மலாய் கழிக்கும் இடங்களோ ஆற்றங்கரைகளோ அசுத்தமாக இருக்கின்றன. இப்பெருங்குறையைப் பரிகரிப்பதற்காக நான் ஆமதபாத் காங்கிரஸில் தோட்டிவேலை செய்வதற்காக பிராமணர்களையும் பிராமணரல்லாதார்களையும் கொண்ட தொண்டர்படை ஒன்றைத் திரட்டநேரிட்டது. சுத்தமாகவும் அதிகச் செலவில்லாமலும் சுத்திகரிப்புவேலையை நடத்தவேண்டுமானால் ஒவ்வொருவரும் தனக்குத்தானே தோட்டியாக இருக்கவேண்டும்.

இந்நகர க்ஷேமத்தில் கருத்துடையவர்கள் தாய்மார்கள் மாதிரி சுத்திகரிப்பு வேலையைச் செய்யவேண்டும். நீங்களே தோட்டிவேலையைச் செய்வதாகத் தீர்மானித்திருப்பதாகச் சொன்னால் நான் மனம் பூரித்திருப்பேன். நாடார்களைக் கோயிலுக்குள் விடாதிருக்கும் தடையைப் போக்க சீக்கிரம் ஏதேனும் வழியைக்கண்டு பிடிக்கவேண்டும்.

ஃ ஃ ஃ

### தூத்துக்குடி.

7—10—27

திருநெல்வேலிக்கும் மதுரைக்கும் இடையேயுள்ள கோவில்களில் மட்டுமே நாடார்கள் பிரவேசிக்க அநுமதிக்கப்படவில்லை என்று நாடார் சிநேகிதர்களிடமிருந்து நான் தெரிந்துகொண்டேன். தீண்டக்கூடாதவரென்று அழைக்கப் படுகிறவர்களைக் கோயிலுக்குள் பிரவேசிப்பதைத் தடுப்பதும் அறத்திற்கு விரோதமாயிருப்பதும் தப்பானதும் பாபகரமான செயலுமாகும். முயற்சியுடையவரும் ஆசார அநுஷ்டான சீலராய் சுத்தமாய் இருப்பவர்களுமான நாடார்கள் ஏன் கோயிலுக்குள் அநுமதிக்கப்படுவதில்லை யென்பது என் புத்திக்கு எட்டவில்லை. இது காறும் இருந்ததுபோக இனியேனும் ஹிந்துக்கள் விழித்தெழுந்து நம்மிடையே நின்று நம் சமூக முன்னேற்றத்தை வெகுவாகப் பாதித்துவரும் இச்சமூக இடையூறுகளை அறவே களைந்தெறிய முற்படுவார்கள் என்று நம்புகிறேன்.

ஃ ஃ ஃ

### கோயில் பட்டி

6-10-27.

என் உயிருள்ளவரை தீண்டாமையைப் போக்க முயலுவேன். கதர் இயக்கம் எவ்வளவுக்கெவ்வளவு விருத்தியடைகிறதோ அவ்வளவுக்கவ்வளவு தீண்டாமை போய்விடுமென்று நான் நம்புகிறேன். ஏனெனில் கதர் சமத்துவத்தை நிலைநாட்டுகின்றது. இந்நாட்டில் பிறந்த எவரையும் நாம் ஒரு தாய் வயிற்றில் பிறந்த சகோதர சகோதரிகளைப்போல் கருதவேண்டும். மதுரை ராமநாதபுரம் திருநெல்வேலி ஜில்லாக்களில் உள்ள கோயில்களில்மட்டும் நாடார்கள் கோயில்களுக்குள் விடப்படுவதில்லை என்பதைக்கேட்டு நான் வருத்தப்படுகின்றேன். அவர்கள் வடஜில்லாக்களில் எல்லாக் கோயில்களுக்குள்ளாகவும் விடப்படுகின்றார்கள். இந்த 3 ஜில்லாக்களில் மாத்திரம் விடப்படவில்லை. இந்த வழக்கத்தைக் கண்டு நான் சிரிப்பதா? அல்லது அழுவதா? இவ்வழக்கத்தைப் போக்கிவிட ஜில்லாக்களில் உள்ள நாடார் சகோதரர்களுக்கு இருப்பது போன்று தென் ஜில்லாக்களில் உள்ள நாடார் சகோதரர்களுக்கும் கோயில் பிரவேச உரிமை கிடைக்கும்படி செய்யவேண்டுமென்று எல்லா ஹிந்துக்களையும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

---

**நாடார் மக்களே !**

**தீபாவளி வந்துவிட்டது.**

**தேச மக்கள் ஏழ்மைதவிர்க்க எல்லோரும் கதரணியுங்கள்.**

**கதரபிவிர்த்திதான் இந்தியர்க்கு கதிமோக்ஷம்.**

**அந்நிய நாட்டுத்துணியி லழிக்கும் பணத்தை அறவழியாம் கதரணிதலில் செலவிடுங்கள். நாடு சுபிக்ஷமுற நாடுங்கள்.**

---

## விருதுநகரில் காந்தியடிகளின் விஜயம்.

உலகம் போற்றும் உத்தமரும், கதர் அரசரும், கருணைக்கடலுமான மகாத்மா காந்தியடிகள் (2—10—27) பிரபவ வருடம் புரட்டாசி மீ 16ம் உ ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு வந்து சேர்ந்தனர்.

காலை 8 மணிக்கு ஸ்ரீமான் கா. பழனிச்சாமி நாடார் அவர்களால் கட்டப்பட்ட சத்திரத்தைத் திறந்துவைத்தார்கள். மாலை நான்கு மணிக்கு பெண்களுக்கு உபதேசம் செய்த பின் சில ஜஸ்டிஸ் நண்பர்களுடன் பேசினர். அன்று மாலை 6 மணிக்கு ரெயில்வே ஸ்டேஷனுக்கு சமீபத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் 6000 ஜனங்கள்வரை பெண்களும், ஆண்களுமாகக்கூடி இருந்தனர். மாணவர்களும், த. இ. வாசகசாலையாரும், நகரசபையினரும் ஸ்ரீ அடிகளுக்கு உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுத்தனர். நகரின் சார்பாக ரூபாய் 1400 ம், சில்லரையாகவும் பண முடிப்புக் கொடுக்கப்பட்டது. உபசாரப் பத்திரத்திற்குப் பதில் சொல்லிய பின், சுகாதார விருத்தி செய்ய வேண்டுமென்றும், கல்வியும், சுகாதாரமும் முக்கியமென்றும், அவைகளை முனிசிப்பாலிட்டியார் கவனிக்க வேண்டுமென்றும் சொல்லிய பின் கதர் இயக்கமானது வருடத்தில் நான்கு மாதங்கள் வேலையற்று, அரை வயிற்றையும் நிரப்பச் சக்தியற்று, கஷ்டப்படும் லக்ஷக்கணக்கான ஏழைக் கிராமக் கூலிகளைக் காப்பாற்றுவதற்கே யேற்பட்டதென்றும், பணக்காரர்கள் தங்கள் பணத்தினால் வாழலாமென்றும், ஆனால் ஏழைக் குடிகள் கால் வயிற்றிக்கும் அன்னமில்லாமல் வருந்துகிறார்களென்றும், அவர்கள் சுகமாக வாழ வேண்டுமானால் கதர் தான் முக்கிய கருவியென்றும், கதரே கதிமோக்ஷமென்றும், அதைப் பரப்புவதின் பொருட்டே தான் வருவதாகவும், மகாஜனங்களை வரும் கால் வயிற்றிற்கும் ஆகாரமில்லாமல் தவிக்கும் ஏழைகளைக் காப்பாற்றி தரித்திரத்தை ஓட்டிவிட வேண்டுமென்றும் சொல்லி முடித்தார்.

மறுநாள் இரவு சுமார் 9 மணிக்கு மகா-ள-ள-ஸ்ரீ எஸ். பி. பி. சண்முகசுந்தர நாடார் அவர்கள் ஸ்ரீ காந்தியடிகளிடம் நாடார்களின் குறைகளைப் பற்றியும், நாடார்களின் முன்னேற்றத்திற்கு முக்கியமாக பிராமணரல்லாதாரே தடை செய்கிறார்களென்றும் அதிக விரிவாக முக்கால முதல் தற்காலம்வரை நிகழ்ந்தவைகளைப்பற்றி எடுத்துச் சொன்னார்.

காந்தியடிகள் சுமார் $1\frac{1}{2}$ மணி நேரம் விசாரித்தபின் நாடார்களுக்காகத்தான் அநுதாபப்படுவதாகவும் சொல்லியபின் தான் தன்னால் கூடிய உதவிகளைச் செய்யத் தயார் என்று வாக்களித்தார். கடைசியாக காந்தியடிகள் பள்ளிக்கூட நிர்வாகத்தைப்பற்றி விசாரித்தார்.

கதர் இயக்கத்தையும் நாடார்கள் தீவிரமாய் நடத்த வேண்டுமென்று சொல்லி முடித்தார். மிற்க, ஜஸ்டிஸ் நாடார் நண்பர்கள் சுமார் இரண்டு மணி நேரம் பேசியவர்கள் நாடார்களின் விஷயத்தைக் கடுகளவேனும் எடுத்துச் சொல்லாதது ஆச்சரியப்படத்தக்கதே.

ஸ்ரீ காந்தியடிகளின் கதர் இயக்கம் நாளொருமேனியும், பொழுதொரு வண்ணமுமாக மென்மேலும் வளரவும், காந்தியடிகள் நீடூழி வாழவும் அடியார்க்கடியனே வேண்டுகின்றேன்.

ப. வே. ச. பழனிச்சாமி.

---

**தீண்டாமை திரும்பட்டும்**

**தேசத்தை ஒருமுகப்படுத்துவது மணற்கயிறு திரிப்பதொக்கும்**

Tamil Heritage Foundation International Digital Library EBook collection





சாதி குலம் பிறப்பிறப்புப் பந்த முத்தி
அருவுருவத் தன்மை நாம

மேது மின்றி யெப்பொருட்கு மெவ்விடத்
தும் பிரிவற நின்றியக்கஞ் செய்யுஞ்

சோதியை மாத்தா வெளியை மனதவிழ
நிறைவான துரிய வாழ்வைத்

தீதில் பரமாம் பொருளைத் திருவருளே
நினைவாகச் சிந்தை செய்வாம்.

---

# நாடார்குலமித்திரன்

பிரபவ ஹு அற்பிசி மீ கஉ

## புது அதிகாரிகள்.

கும்பகோணத்தில் 2-10-27-ல் நடைபெற்ற நாடார் மகாஜன சங்கம் ஜெனரல் மீட்டிங்கில் மகாஜன சங்கத்திற்கு வழக்கம்போல் புது அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப்பெற்றார்கள். அதன் முழு விபரங்களைச் சென்ற வாரத்தில் வெளியிட்டிருக்கிறோம். அவர்களைப்பற்றி யாவரும் நன்கறிந்திருந்தபோதிலும் வழக்கம்போல் ஜனங்களுக்கு நமதபிப்பிராயங்களை வெளியிட விரும்புகிறோம்.

பிரஸிடெண்ட் ஸ்ரீமான் வெ. கனகசபை நாடாரவர்கள் மாஜிப்பிரஸிடெண்ட் ஸ்ரீமான் பாலகுருசாமி நாடாரவர்களுடைய சகோதரரும், காலஞ்சென்ற ராவ்பஹதூர் ரத்தினச்சாமி நாடாரவர்களின் தம்பி புத்திரருமாவர். இவர் சுமார் முப்பது வயதுக்குட்பட்ட ஒரு சிறந்த வாலிபராயினும் பேச்சு வன்மையும், சமரச ஞானமும், ஜனாபிமானமும் நிறைந்த ஓர் பெரியவராகக் காணப்படுகிறார். சாதாரண ஜனங்களுக்குள் அன்புடன் பழகும் சுபாவமுள்ள இவரது ஆட்சியில் நாடார் மகாஜன சங்கம் புதிய மாறுதலடையக்கூடும். காரிய நிர்வாகஸ்தர்கள் நேரம் வாய்த்த போதெல்லாம் சமூக சீர்திருத்தப் பிரசாரத்திற்கு அழைப்பினும் வரத் தயாராயிருப்பதாக வாக்களித்திருக்கிறார்களென்றுங் கேள்விப்படுகிறோம். காலஞ்சென்ற ஸ்ரீமான் இரத்தினச்சாமி நாடாரவர்கள், இவரின் அதிபால்ய வயதின் மனோவலிமையையும் தேக அமைப்பையுங்கண்டு இவரை 'சோல்ஜர்' என்றே அழைப்பாராம். எதிர்காலத்தில் ஓர் சிறந்த தலைவராகவும் வரக்கூடுமென்று அடிக்கடி சொல்லுவது வழக்கமாம். அவ்வாறு போற்றிப் புகழப்பெற்ற கனவானை நமக்குத் தலைவராகக் கிடைத்ததிலிருந்து அப்பெரியார் கூறிய சோதிடம் பலித்துவிட்டது என்றே நம்புகின்றோம்.

ஸ்ரீமான் சௌந்தரபாண்டிய நாடாரவர்களை இரண்டாவது முறையும் ஏகமனதுடன் வைஸ் பிரஸிடெண்டாகத் தேர்ந்தெடுத்திருப்பதிலிருந்து அவர் ஜனங்களுக்கு எவ்வளவு பிரியமுடையவராயிருந்திருக்கிறாரென்பதும், சமூக சீர்திருத்தத்தில் அவர் எவ்வளவு பிரியமுடையவராயிருந்து வந்திருக்கிறாரென்பதும் நன்கு விளங்குகிறது. அவரைத் தேர்ந்தெடுத்தவுடன் சென்ற வருடத்தில் தம்முடைய சமூக ஊழியத்தைப்பற்றிக் குறைகூறியிருப்பதாகவும், தமக்குப் பல ஜோலிகளிருப்பதாகவும் பெயரளவில் தாம் அவ்வேலையை ஏற்றுக்கொள்வதாகவும் கூறினர். அவ்வமயம் ஆங்கு கூடியிருந்த மக்கள் மனதில் வருத்தக்குறிகள் மிகவே காணப்பட்டன. ஏன்? பூரண மனிதர் உலகத்தில் ஒருவருமில்லை; எல்லோருக்கும் ஒவ்வொரு குறையிருக்கத்தான் வேண்டும். இருந்தாலும் ஒருவரை பொருவர் குறை கூறுவது சகஜம். அதில் மிகைப்படக்கூறுவதுமுண்டு. மகாத்மா காந்தியையுங்கூட கயிறுகட்டிக் குரங்காட்டிக் குறைகூறும் இந்தக் காலத்தில் ஸ்ரீமான் சௌந்தரபாண்டியநாடார் ஊழியத்தில் குறைகூறியது ஆச்சரியமில்லையென்று நான் கூறவேண்டும். ஆகையால் அங்ஙனம் அவர் சொல்லியிருக்க வேண்டியதவசியமில்லை. குறைகூறுவதெல்லாம் நிறைவின் வரவாகுமென்று மௌனியாயிருந்திருக்கவேண்டும். ஆயினும் அப்பக்காரியங்களுக்கெல்லாம் குறை கூறும் பீரங்கிகளுக்கு ஒரு பாதுகாப்பாகவே அவ்வார்த்தையை அவர் பிரயோகித்திருக்கவுங்கூடும். ஆசையால் சமூக வேலை செய்வதில் அவர் ஒரு பொழுதும் பின்னடங்கமாட்டார். அதில் ஒருவரும் சம்சயப்பட வேண்டியதுமில்லை. ஜாதிய சம்பந்தமான எந்த நல்ல காரியத்திலும் அவர் எப்போதும்போல் முன்வந்து வேலைசெய்வதில் ஒரு போதும் பின் வாங்கமாட்டாரென்றே நாம் பூரணமாய் நம்புகின்றோம்.

காரியதரிசி ஸ்ரீமான் பாண்டிய நாடாரவர்களைப்பற்றிநாம் ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. சாஸ்வதமாக அந்த வேலையை அவருக்கே விட்டுவிட்டாலும் நமக்குச் சம்மதமே. பொறுமையே உருவாய் வந்த அவரைப் பொதுஜனங்கள் விட்டுவிடாமல் மீண்டும் தேர்ந்தெடுத்திருப்பதுபற்றி யார்தான் சந்தோஷப்படாமலிருக்க முடியும்? இவருக்குச் சகாவாயிருந்து லாட்டரியை வெற்றியுடன் முடிக்க ஓர் அங்கமாயிருந்தவராகிய ஸ்ரீமான் ஆறுமுகநாடாரவர்கள் தம் சொந்த அலுவல்களை முன்னிட்டும் மற்றும் பல நண்பர்களுக்கு அப்பொறுப்பை ஏற்றுக்கொள்ள சந்தர்ப்பங்கொடுக்க வேண்டுமென்ற பெரும் நோக்கத்தைக்கொண்டும் தாம் விலகிக்கொண்டார். அவருக்குப் பதிலாக அவருடைய சகாக்களிலொருவராகிய ஸ்ரீமான் ப. வ. சோமசுந்தர நாடாரவர்கள் தேர்ந்தெடுக்கப்பெற்றிருக்கிறார். இவர் மிகுந்த தேசாபிமானியும் குலாபிமானியுமாவர். ஊழியப்பிரசார சபைக்கு பிரஸிடெண்டும், மதுரை காங்கிரஸ் சபை பொக்கிஷதாருமாவர். மகாஜன சங்கத்துக்கு நல்லூழியம் செய்தவர். மூன்று கான்பரன்ஸ்களை முன்னின்று வெற்றியுடன் நடத்தி வைத்தவர்களிலொருவர். லாட்டரியையும் காரியதரிசிகளுடன் பூரணமாய் வேலை செய்து வெற்றி பெறச் செய்தவர். தர்மசிலமும் தயாளகுணமுமுள்ளவராவர். அவருடைய நண்பர்கள் பலருடைய விருப்பத்திற்கிணங்க காரியதரிசி வேலையையும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

இவ்விரு காரியதரிசிகளும் ஒத்துழைத்து மகாஜன சங்கத்திற்குப் புத்துயிரளிப்பார்களென்று நம்புகிறோம். தகுந்த பிரசாரகர்களை வைத்து தலைக்கட்டுவரிப் பாக்கி சந்தாப்பாக்கிகளையும் வசூல் செய்து பொருளாதார நிலைமையைச் சீர் செய்து புதுவேலைத் திட்டங்களை மேற்கொள்வார்களா? ஜனங்களுக்கு அனுப்பவேண்டிய ஸர்க்குலர்களைக் காலதாமதமின்றி வெளியிடுவார்களா? புது அதிகாரிகள் அடுத்த புது வருடத்திற்குப் புதுச்சங்கங்கள், புதுக்கலாசாலைகள், புது அங்கத்தினர்கள் எவ்வளவு அதிகரிக்கப் புதுக் கவனம் செலுத்துவார்களென்று ஆவலுடன் எதிர் பார்க்கின்றோம்.

---

## நாடார் மகாநாடும், "தமிழ் நாடு"ம்.

கும்பகோணத்திற்கூடின நாடார் மகாநாட்டைப்பற்றி "தமிழ்நாடு" கவனித்து 1—10—27-ல் வெளியான தலையங்கத்தில் நாடார்களுக்கு அனுதாபத்துடன் நன்மதி கூறியிருக்கிறது. அவைகளையெல்லாம் நாம் மனமுவந்து ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் "தமிழ்நாடு" எவ்வளவோ தன்னையடக்கிச் சமரச நிலையில் நின்று எழுதினபோதிலும் தீண்டாமையை நாடார்கள் பால்கலப்பதுபற்றி "தமிழ்நாடு" நாடார்களை நன்கறியவில்லையோ வென்றையமுண்டாகிறது. பொல்லாவர்ணாச்சிரமதர்மத்தை நாடார்கள் அனுசரிக்கவில்லை; அனுமதிக்கவுமில்லையென்பதைப் பிறிதோரிடத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. க்ஷத்திரிய சப்தத்தைப்பற்றியும் மற்றோரிடத்தில் சமாதானம் சொல்லப்பட்டிருக்கிறது.

"வர்ணாச்சிரம அதர்மத்தை ஒழிக்கவேண்டுமானால் மேல் ஜாதியார் மட்டும் முயற்சி செய்வதால் நடந்துவிடாது. யார் அந்த வர்ணாச்சிரமத்தால் கஷ்டப்படுகிறார்களோ அவர்கள் அனைவரும் சேர்ந்து வேலை செய்யவேண்டும். தீண்டாமை ஒழிக்க வேலை செய்யும்போது வர்ணாச்சிரம தர்மத்தை நிலைநிறுத்த நாடார் சகோதரர்களிற் சிலர் முயற்சிசெய்வது வருந்தத்தக்க"தென்று "தமிழ்நாடு" வருந்துகிறது.

இவ்விடத்தில் மேல் ஜாதி கீழ் ஜாதி என்ற பாகுபாட்டை "தமிழ்நாடு"தானே வருவித்துக்கொண்டு சமாதானமெழுதப் புகுந்தது மிகவும் வருந்தத்தக்கது. இதனால் மேல் ஜாதி மயக்கம் "தமிழ்நாட்"டுக்கு உண்டோவென்றையமுண்டாகிறது.

எத்தனையோ பேர்களிலொருவர் அன்புடனும் ஆர்வத்துடனும் தேச சீர்திருத்தக்காரர்களாய் வரலாம். வந்தவுடனே சீர்திருத்தக்காரர்களே வழிதப்பிப் போனால் அவர்களைத் திருப்புவோர் யார்? ஆகையால் "தமிழ்நாடு" எழுதிய சில பாகங்கள் சரியாவென்பதை மறு முறையும் பார்க்குமென்று நம்புகின்றோம்.

இதனால் "தமிழ்நாடு" வேணுமென்று நாடார்களைக் குறித்து தவறு செய்துவிட்டதாக நாமெழுதவில்லை. ஒன்றுக்கொன்று சகபாடிகளாகவே தைரியமாய்த் தெரிவித்துள்ளோம்.

---

## குறிப்பு.

### பத்திரிகை பகிஷ்கரிப்பு.

கும்பகோணம் மகாநாட்டின் மகாஜன சங்கம் ஜெனரல் மீட்டிங்கில் "சுதேசமித்திரன்", "நவசக்தி" ஆகியவைகளை பகிஷ்கரிக்க வேணுமென்றொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பதை யொட்டி ஆதரித்து ஒரு சிலவும் ஆக்ஷேபித்துப் பலவுமாகக் கடிதங்கள் வந்துகொண்டிருக்கின்றன. இடமின்மையாலும் இது விஷயத்தில் சங்கம் தலையீடின்றி வேறுயாரும் தலையிடாது பொறுத்திருக்கும்படி சங்கம் ஆணையிட்டிருப்பதாலும் அவைகளனைத்தையும் பிரசுரியாது அவைகளிலொன்றை மட்டும் மறு பக்கத்தில் வெளியிட்டிருக்கிறோம். காரியார்த்த மற்ற பதக்கொண்டு, இலகுவில் அனுஷ்டான சாத்தியமற்ற ஓர் தீர்மானத்தை இது விஷயத்தில் நிறைவேற்றியிருப்பதானது அவ்வளவு விரும்பத்தக்கதல்லவென்று நினைக்கிறோம். ஆனால் ஒரு சமூகத்தை பாதிக்கக் கூடியவாறு பதப்பிரயோகஞ் செய்திருப்பதைக் கண்டித்திருக்கலாம். வாயடைபெறச் செய்திருக்கலாம். என்றாலும் இனி அது சட்டவிதிப்படி, ஒரு ஜெனரல் மீட்டிங்கில் தீர்மானமான விஷயமாய்ப் போய்விட்டமையின் அதைத் திருத்தவோ மாற்றவோ செய்ய இத்தகையவொரு ஜெனரல் மீட்டிங்கிற்குத்தான் அதிகாரமிருக்கிற நிலைமையில் அவசரப்படவேறுதவில்லை. எனவே மகாஜன சங்கமும் இது விஷயமாய் நடவடிக்கை நடத்திக் கொண்டிருப்பதால் அதன் முடிவுவரை பொறுத்திருக்க வேண்டுகிறோம்.

---

### எங்கே பத்திரிகாபிமானம்?

22-8-27-ல் வெளியான நம்மித்திரன் 4-வது பக்கத்தில் குறிப்பிட்டுள்ள நம்மித்திரன் சந்தா நேயர்களின் அபிப்பிராயங்களையும் மித்திரன் சந்தாதாரர்களின் அபிவிருத்தியையும் பார்க்க மிகுந்த விசனத்திற்கிடமாகிறது. காரணம் நாளடைவில் நம்மிடத்தே பத்திரிகாபிமானம் குன்றி வருவதாகவும் சந்தாப் புள்ளிகளின் பேரில் ரூ 2000-ம் பாக்கி நிற்பதாகவும் காணப்படுவதே. இவ்விதம் பாக்கி வைத்துக்கொண்டால் மித்திரன் அதிபரவர்களுக்கு எவ்வளவோ கஷ்டமிருக்கலாம். ஆகையினால் மித்திரன் மீதன்பு கூர்ந்து சந்தாப்பாக்கி இருக்குமேல் அவைகளை அனுப்புவதுடன் புதுச்சந்தாதாரர்களைச் சேர்த்து கொடுக்கும்படியும் அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன். இதன்றி, மித்திரன் ஜனமித்து 9 ஆண்டுகளாக நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து மாதம் ஒரு முறையிருந்து இருமுறையாகி மும்முறையாகி தற்பொழுது நான்குமுறையாக இப்பிரபஞ்சத்தில் நடக்கும் சமாச்சாரங்களையும் நம் குல முன்னேற்ற விஷயங்களையும் நம்மில்லங்களில் வந்து நமக்குத் தெரிவித்து வருகிறான். வளர்பிறை சந்திரனுக்குச் சமானமாக வளர்ந்து வரும் நம் மித்திரன் பெயரை மாற்றிவைப்பதான அபிப்பிராயம் கூடாததாகும். குழந்தை ஜெனனமானவுடன் ஓர் அழகிய பெயரை அதற்குச் சூட்டி ஆயுள் மட்டும் அப்பெயரைக் கொண்டே அழைப்பதுபோல் நம்மித்திரனுக்கு ஜெனன காலத்திலிட்ட பெயரையே ஆயுள்பரியந்தமும் உறுதி செய்யவேண்டும். நங்குலத்தவர்கள் பரோபகார தானதர்மங்களிலும் வியாபார விவசாயங்களிலும் மேம்பாடடைந்து வருவது யாவரும் அறிந்த விஷயம். அப்படியிருக்க நம்மித்திரன் சகாயவுக்காக நாள் 1-க்கு 2 பைஸ் செலவு செய்யக்கூடாதா? உத்தமகுல நாடார் கனவான்களே! நம்மித்திரன் மீது அபிமானம் வைக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஏம். ஏஸ். சுந்தரநாடார்,
பொதலக்கூர்,
நெல்லூர் ஜில்லா.

---

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## தீபாவளி.

வரும் தீபாவளியன்று இந்தியர்கள் அனைவரும் கொண்டாடும் பண்டிகைக்கு ஏழைகள் பிணிதீர்ப்பதும், இந்தியர் மானத்தைக் காப்பதும், தொழிலாளர்களுக்கு தங்கள் குடிசைகளிலிருந்தே யாதொரு இன்னலுக்குமிடமின்றி தொழில் செய்து சுஜீவனம் செய்தற்கேது கொடுப்பதும், நமது பணம் நமது நாட்டிலேயே தங்கி நம்மை ஏழ்மைப்படுத்தாது காப்பது மாய சுதந்தரர் ஆணிகளையே யாங்கி ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் அணிதல் வேண்டுமென நேட்டுக்கொள்வதாக மதுரை ஸ்ரீ க. ஞானசுந்தரம் எழுதுகிறார்.

## க்ஷத்திரிய ஐக்கிய சங்கம்.

இச்சங்கத்தின் 18-வது மாதாந்திர ஜெனரல் மீட்டிங் நாளது 1103-வருஷம் புரட்டாசி மீ 24வ திங்கள்கிழமை இரவு 9-மணிக்கு ஏறல் நாடார்கள் பொது ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகோவில் பஜனை மடத்தில் ஸ்ரீமான் பி. வி. சிதம்பரநாடாரவர்கள அக்கிராசனத்தலைமையின் கீழ் நடந்தது. அதில் ஸ்ரீமான் ஏ. ஜியார்ஜிசாமுவேல் அவர்கள் "விடாமுயற்சி" என்பதைப்பற்றியும், ஸ்ரீமான் எஸ். சங்கரலிங்க நாடாரவர்கள் "ஒற்றுமை" என்னும் விஷயத்தைப்பற்றியும், சங்கப் பிரசிடெண்ட் ஸ்ரீமான் எம். ஆர். துரைநாடாரவர்கள் "எடுத்தகருமத்தை தொடுத்து முடி" என்னும் விஷயத்தைப்பற்றியும் உபந்நியாசித்தார்கள். இதற்கிடையே சங்கத்தின் கட்டட நிதிக்காக ரூ 42-0-0 நன்கொடையாக வசூலிக்கப்பட்டது. அக்கிராசனாதிபதியவர்கள் முடிவுரைக்குப் பின் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் முடிவுற்றது என்று காரியதரிசி ஸ்ரீமான் மா. ப. ஆறுமுகநாடார் எழுதுகிறார்.

## அய்யம்பட்டியில் வாசகசாலை திறப்புவிழா.

சிவகாசிக்கு வடக்கே 8 மைல் தூரத்திலுள்ள அய்யம்பட்டி என்ற லட்சுமி நாராயணபுரத்திலுள்ள 40 வீட்டு நாடார் பெருமக்களின் நன் முயற்சியாலும், பாலியர்களின் ஊக்கத்தாலும் புதிய கட்டடத்தோடு கூடிய வாசகசாலை யொன்று ஏற்படுத்த நாளது புரட்டாசி மீ 21 வ வைக் குறிப்பிட்டிருந்தது. அன்று வைபவத்திற்கு நாடார் மகாஜன சங்கம் மாஜி பிரசாரகர் ஆசிரியர் ஸ்ரீமான் எஸ் அப்பாத்துரை நாடார் அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். பக்கத்தூரிலிருந்து ஏராளமான ஜனங்கள் வந்திருந்தனர். கூட்டம் ஆரம்பமானதும் கடவுள் வணக்கத்திற்குப் பின் மகா-௱-௱-ஸ்ரீ களான ஆ. கருப்பண நாடார், மா. பழனிச்சாமி நாடார், கா. பழனிச்சாமி நாடார் ஆகியவர்களால் முறையே கல்வி, பத்திரிகையின் பிரயோசனம், ஊக்கமே ஆக்கம் எனும் விஷயங்கள் உபந்நியசிக்கப் பெற்றன. அக்கிராசனரால் வாசகசாலைத் திறப்பு வைபவத்தைப்பற்றி பேசியானதும் முக்கியஸ்தர்களுக்கு பூ மாலை சூட்டப்பட்டு வந்தனோபசாரம் கூறப்பட்டது. இவ்வாசகசாலைக்கு நன்கொடைகள் வசூலிக்கப்பட்டிருப்பதுடன் நாடார் குல மித்திரன், தமிழ் நாடு, ஆனந்த போதினி, மனோரஞ்சனி ஆகிய பத்திரிகைகளும் வந்துகொண்டிருக்கின்றன. வாசகசாலையாவாய பயனை எண்ணி மக்கள் நடந்து பயன் பெற ஈசனை வேண்டுவதாக காரியதரிசி ஸ்ரீமான் மா. பழனிச்சாமி நாடார் எழுதுகிறார்.

## கும்பகோணம்

### தேக்கச்சேரி.

(சொந்த நிருபரிடமிருந்து)

3—10—27-ல் மாலை 5-மணிக்கு மெஜாவரி பங்களாவில் குறிஞ்சிப்பாடி ஜமீன்தார் ஸ்ரீமான் த. செ. ஜீவரத்தினசாமி நாடார் அவர்கள் 11-வது நாடார் கான்பரன்ஸுக்கு விஜயம் செய்திருக்கும் கனவான்களுக்கு ஓர் தேக்கச்சேரி நடத்தி சுமார் 100 பேர் வரை படம் எடுக்கப்பட்டது. இதற்கு விஜயம் செய்திருந்தவர்களில் ஸ்ரீமான் வெ. கனகசபை நாடார் அவர்கள், ஸ்ரீமான் ஊ. பு. அ. சௌந்தரபாண்டிய நாடார் எம். எல். ஸி. அவர்கள் ஆகிய பலர் முக்கியஸ்தர்களாவார்கள்.

பின் ஒரு கூட்டம் கூடிற்று. அதில் ஸ்ரீமான் த. செ. ஜீவரத்தினசாமிநாடார் அவர்களின் உபசாரத்தையும் அன்னவர் நம் நாடார் மஹாஜன அன்பின் அருமை பற்றியும் ஸ்ரீமான்களான எஸ். கே. ராமசாமி நாடார் அவர்கள், சனியப்பநாடார் அவர்கள், தி. கருப்பையா பிள்ளை அவர்கள் "நாடார் குல மித்திரன்" ஆசிரியர் ஸ்ரீமான் ஆ. ஆ. முத்து நாடார் அவர்கள், ஆறுமுகம் பிள்ளையவர்கள், ராமய்யா நாடார் அவர்கள் ஆகியவர்கள் பேசினார்கள். ஸ்ரீமான் ஜீவரத்தினசாமி நாடார் அவர்கள் நர மித்திரனுக்கு போஷகராக சேர்வதாக வாக்களித்திருக்கிறார்கள். இவர்களின் அன்பார்ந்த உபசாரம் அனைவராலும் புகழத்தக்கதே.

## மதுரை ஜில்லா போர்டு தேர்தல்.

### நாடார் வெற்றி.

உசிலம்பட்டியில் நடந்த தாலுகாப் போர்டு கூட்டத்தில் ஜில்லா போர்டு காலியான மெம்பர் ஸ்தானம் ஒன்றுக்கு உயர் திருவாளர் மூகவல்லி ப. வீ. ஆதிமுத்தமாலை நாடாரவர்களுக்கும், போடிநாயக்கனூர் ஸ்ரீமான் ஆ. எஸ். சுப்பையா செட்டியாரென்ற போஜன் செட்டியாரவர்களுக்கும் போட்டியாக தேர்தல் நடைபெற்றதில் திருவாளர் மூகவல்லி நாடாரவர்களுக்கு ஓட்டு 12-ம் ஸ்ரீமான் செட்டியாரவர்களுக்கு 8 ஓட்டுகளுமாகக் கிடைக்கப்பெற்று ஸ்ரீமான் நாடார் அவர்களே மறுபடியும் தேர்ந்தெடுக்கப்பெற்றார். ஸ்ரீமான் நாடார் அவர்கள் வெகு காலமாக யூனியன் சேர்மன், தாலுகா போர்டு டிஸ்ட்ரிக்ட் போர்டுகளில் மெம்பர் ஸ்தானங்கள் வகித்து நம் நாட்டிற்கு நன்மை வேண்டிய ஊழியம் செய்து வருபவரென்பதைக் குறித்து சந்தோஷிக்கிறோம். இதை அறிந்தே தாலுகா போர்டு மெம்பர்களும் ஸ்ரீமான் நாடார் அவர்களுக்கு தங்களுடைய ஓட்டுகளைக் கொடுத்து தேர்ந்தெடுத்தது பாராட்டத்தக்கது என்று ஸ்ரீமான் வ. எஸ் பி. சாமி எழுதுகிறார்.

## அகால மரணம்.

பாளையங்கோட்டை மேரி ஆர்டன் ஸ்கூல் மைட்டரும் சிறந்த குலாபிமானியுமான ஸ்ரீமான் மயிலேறிசிவாசகநாடாரவர்கள் ஏகபுத்திரன் 5 வயதுள்ள பாண்டியன் எனும் சிறுவன் இவ்வளவு காலத்திற்குள் அவனிடமுள்ள அபூர்வமான கல்வித்திறமை, குலாபிமானம், தெய்வபக்தி, உடல்வலிமை, மனோகரியம் முதலான குணாதிசயங்களைக் கண்டு பெரியோர் அனைவரும் மிகவும் பாராட்டிவந்தனர். நாளது மீ 5வ நிகழ்ந்துள்ள அவனது அகால மரணமானது ஆழ்ந்த துயரை யுண்டு பண்ணியிருக்கின்றது. துக்கசாகரத்தில் அமிழ்ந்திருக்கும் பெற்றோருக்குக் கடவுள் ஆறுதல் அளிப்பாராக என்று பாளையங்கோட்டை ஸ்ரீமான் டி. மாசிலாமணிநாடார் எழுதுகிறார்.

## செய்தித் திரட்டு.

அருப்புக்கோட்டை ஸ்ரீமத் ஞானநாதநாயனார் 26-வது குருபூஜை நாளது புரட்டாசி மீ 19வ நாடார் பொது சிங்கார நந்தவனத்தில் அதி சிறப்பாய் நடைபெற்றது. சுமார் 6000 ஜனங்கள் அறுசுவையுடன் அன்னமருந்தி ஆத்ம திருப்தி யெய்தினர். 24வ திங்கட்கிழமை ஸ்ரீமத் ஞானநாதநாயனார் திருமடாலயத்தின் முன்பாக ஞானநாதநாயனார், நந்தனார் சரித்திரங்கள் நாவலர் பாவலர்களைக் கொண்டு பக்திரசத்துடன் நடத்தி வைக்கப்பட்டன.

வரும் டிசம்பர் மீ 10வ பம்பாயில் குதிரைப் பந்தயம் ஆரம்பித்த பின்னர் வி. என். வாடியா தனது பந்தயக் குதிரைகளை ஏலத்தில் விட்டு விடப் போகிறதாக உலாவும் வதந்தி கண்டு குதிரைப் பந்தய ஆதாட்டத்தில் அபிலாச முள்ளவர்களுக்கு திகில் ஏற்பட்டிருக்கிறது.

மிஸ் மேயோ எழுதிய "இந்திய மாதா" என்னும் புஸ்தகத்திலுள்ள ஆக்ஷேபணைக்குரிய பகுதியை 'டெய்லி கெஜட்' என்னும் ஆங்கிலப் பத்திரிகை மேற்கோளாக எடுத்துக்காட்டியிருப்பதற்காக காராச்சி முனிஸிபாலிட்டியார் அப்பத்திரிகைக்கு முனிஸிபல் விளம்பரங்கள் கொடாதிருக்க முடிவு செய்வதற்கு ஆலோசிக்கவிருக்கிறார்கள்.

இஸ்திப் என்னும் இடத்தில்சேனைத் தலைவராயிருந்த ஜெனரல் குவாசிவிட்சை இருவர் சுட்டுக் கொன்றுவிட்டார்கள். சுட்டவர்கள் பல்கேரிய தேசத்தைச் சார்ந்த கொள்ளைக்காரர்களென யூகிக்கப்படுகிறது.

டோக்கியோவின்ன பிரஞ்ச் ஸ்தானாதிபதி மோட்டாரில் போய்க்கொண்டிருக்கையில் இரு ஜப்பானிய குடிவெறியர் தாக்கினார்கள். காயமொன்றுமில்லை. கூடவிருந்த கப்பற்படை உத்தியோகஸ்தர் 2 பேருக்குமட்டும் சிறிது காயம். அற்ப விஷயமென மேல் நடவடிக்கை யெடுக்க ஸ்தானாதிபதி விரும்பவில்லை.

ஸ்ரீ ஹார்னிமன் கூடிய சீக்கிரத்தில் ராஜத் துரோகக் குற்றத்திற்கேனும், அல்லது வேறெவ்வகைக் குற்றத்திற்கேனும் கைது செய்யப்படுவாரென அவர் கொள்கை பிடிக்காத சில பத்திரிகைகள் வதந்தி பரப்பி வருகின்றன. எம்மட்டும் உண்மையோ.

கொள்ளைக்காரர்களுக்கு இடங்கொடுத்தாதரித்த குற்றத்திற்காக குருநீன்பா தியா, மனசாமாரென்னுமிருவருக்கு லக்ஷ்மணபுரி ஜில்லா கமிஷனர் ஸ்ரீ குனவன் 3 மாதத் தனிக் காவலுட்பட 2 வருடக் கடுங்காவல் தண்டனை விதித்தார்.

தென்னாப்பிரிக்காவில் பிரிட்டிஷ் கொடிக்கு விரோதமாக உண்டாகியிருக்கும் போர் சம்பந்தமாக அங்கு மிகுந்த பரபரப்பேற்பட்டிருக்கிறது. ஜெனரல் ஸ்மட்ஸ் வகுப்பு, நிற துவேஷங்களைக் கிளப்புகிறவரென்றும், பிரிட்டிஷ் கொடியை நம்முடைய கொடியுடனிணைப்பது நம்முடைய உரிமையைப் பறிமுதல் செய்யவே யெனவும் ஜெனரல் ஹெர்ட்ஜாக் கண்டித்துப் பேசியிருக்கிறார். இன்னவரை சில பத்திரிகைகள் ஆதரித்தும், சில எதிர்த்தும் எழுதுகின்றன.

சாலமன் தீவுகளுக் கருகில் "அஜிக்ஸ்" என்ற கப்பலை வட கிழக்குக் கரையிலுள்ள சில சுதேசிகள் தாக்கி அதிலுள்ள ஒரு வெள்ளைய போலீஸ் கமிஷனரையும், 15 போலீஸாரையும் கொன்று விட்டதாகவும், 4 போலீஸார் மட்டும் பலத்த காயத்துடன் உயிர் தப்பினரென்றும் அதிலுள்ள ஒரு வியாபாரி கூறுகிறாராம்.

பர்தோலி தாலுகா விவசாயிகள் புனி என்னும் இடத்தில் கூடி அதிகப்பட்ட நில வரி செலுத்த மறுக்க வேண்டுமென்றும், கூர்ஜர மாகாண காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஸ்ரீ வல்லபாய்பட்டேலை பர்தோலியில்சாத்வீகப் போராட்டம் ஆரம்பிக்கச் சேட்டுக்கொள்வதாயும் தீர்மானமொன்று நிறைவேற்றியிருக்கிறார்.

பம்பாய்—பர்மா வர்த்தகக் கம்பேனியைச் சேர்ந்த ஜே. பிரஸ் போர்டு என்பார் மீது மாண்டலே என்பவர் மோசடிக் கணக்கு வழக்கு ஒன்று சப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட்டிடம் தொடுத்திருக்கிறார். வாயிதாப்போடப்பட்டிருக்கிறது.

சிராம்புட் பகுதியைச் சேர்ந்த ஒரு இந்துப் பெண் குடும்பக் கஷ்டமேலீட்டால் தன் குழந்தையை மார்புடன் வைத்துக் கட்டித் தன் ஆடையை மண்ணெண்ணெய்யில்தோய்த்துநெருப்பு வைத்துக் கொண்டு குழந்தையுடன் எரிந்து மாண்டனள்.

சென்ற ஜூலை மாதம் 2வ யில் லண்டனினின்றும் மோட்டார் சைக்கிளில் உலகப் பிரயாணம் செய்யப் புறப்பட்ட ஸ்ரீ கிளன்பீல்டு பம்பாயிலிருந்து 1800மைல்களை 6 நாட்களில் கடந்து கல்கத்தா வந்திருக்கிறார். இந்தியாவின் ரஸ்தாக்களை கெளரித்துப் பேசி ரஸ்தாக்கள் இவ்வளவு திருப்திகரமாயிருக்கும் காரணமாயே சீக்கிரத்தில் ஆயிரக் கணக்கான மைல்களைக் கடக்க முடிந்ததெனக் கூறுகிறாராம்.

மாயவரத்தில் விநாயகர் கோவில் நவராத்திரி உற்சவத்தின் போது சில ரயில்வே உத்தியோகஸ்தர்கள் சில தேவ தாசிகளைக் கொண்டு கோலாட்டம், நடனம் செய்வித்ததை ஸ்ரீ சந்திரகாசம் பிள்ளை தலைமையின் கீழ் ஓர் கூட்டம் கூடிக் கண்டித்து, உற்சவ காலங்களிலும், விவாக காலங்களிலும் தேவ தாசிகளைக் கொண்டு ஆடல் பாடல்கள் செய்விக்கக் கூடாதென்றும், அவர்களில் சிறு பெண்களுக்கு பொட்டுத் தாலி கட்டும் வழக்கத்தை நிறுத்த வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள்.

திண்டுக்கல் சர்க்கார் கஜானா ஷராப் ஸ்ரீ சுந்தரராஜலு நாயுடு தற்கொலை செய்து கொண்டதாகவும், கஜானாவில் ரூபாய் 300 குறைவுபட்டிருப்பதாகவும் இது பற்றி விசாரணை நடந்து வருகிறதாகவும் தெரியவருகிறது.

பர்மா கவர்னரான ஸர். ஹார்கோர்ட் பட்லர் செய்து வந்த நன்மைகளுக்கு நன்றி பாராட்டுதலாக அவருடைய உருவச் சிலைகளிரண்டை ஒன்று ரங்கூன் நகரிலும், ஒன்று சர்வகலாசாலையிலும் ஸ்தாபிப்பதற்காகப் பர்மியர்கள் சகல ஏற்பாடுகளும் செய்து கொண்டு வருகிறார்கள்.

நாகை வியாபாரி ஜனாப் மகமத் ஷேக் அலி என்பவர் சென்னை சைனா பஜாரில் சாக்கு வாங்கிக் கொண்டிருக்கும் போதே திடீரென விழுந்து இறந்து போனாராம்.

பர்மாவில் பிரபல கொள்ளைக்காரனும், 8 மாதங்களாக பல கொள்ளை கொலைகள் நடத்தி அகப்படாமலிருந்தவனுமான சான்ஸோப் என்பவன் சில தினங்களுக்கு முன்னர் பிடிபட்டு ஸெஷன்ஸ் கோர்ட்டில் விசாரிக்கப்பட்டு மரண தண்டனை யடைந்தான்.

மெக்ஸிகோ கலவரத்தில், மொர்லஸ்வில் கலகஞ் செய்ததாக ஜோன் ஸல்ஸமம், 13 சட்டசபை அங்கத்தினரும் தூக்கிலிடப்பட்டனராம். ஜெனரல் குஜானோ வென்னும் தலைவரும் கலகக்காரர்களுடன் சேர்ந்து கொண்டதற்காகச் சுட்டுக் கொல்லப்பட்டாராம்.

இங்கிலாந்தில்21வயதுக்குமேற்பட்ட ஸ்திரீகளுக்கு ஓட்டுச் சுதந்திரத்தைக் கொடுத்துவிட வேண்டுமென்ற தீர்மானம் கன்ஸர்வேட்டிவ் கக்ஷி கூட்டத்தில் நிறைவேறி விட்டது. அடுத்த பொதுத் தேர்தலில் ஸ்திரீகளுக்கு செல்வாக்கு அதிகமாகும்.

கிட்டுக் குருவிப் பறவை ஒரு ஜோடியை சங்கடமேதுமின்றி வளர்த்தால் பத்தாவது வருடத்தில் 275 கோடி குருவிகள் வரை பெருகிவிடுமாம்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



# இந்தியர் சுயமரியாதை எங்கிருக்கிறது?

சில தினங்களாக சென்னை மவுண்ட் ரோட்டிலுள்ள நீல் சிலையைச் சில பிராமணரல்லாத இளம் வீரர்கள் தாக்கிவருவதாகவும் அவர்களில் சவர் மெண்டாரின் சட்டப்படி இதுவரையில் 40 தொண்டர்கள் வரையில் கைதிச் செய்து சிறையிலடைக்கப் பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

யாது காரணமாக என்று நோக்குங்கால் ஆயிரத்தி எண்ணூற்றி ஐம்பத்தேழாம் ஆண்டில், நீல துரையவர்கள் இருக்கும்போது கொடிய செய்கைகளைச் செய்தாரென்றும் ஆகையால் அப்பேர்ப்பட்டவனின் உருவச் சிலையிருக்கக்கூடாதென்றும் கூறுகின்றனர்.

நீல்சிலைபற்றிச் சத்தியாக்கிரகம்செய்து சிறைசென்ற தொண்டர்களால் முதலில் மதுரையில் ஆயுதப் போராட்டம் தொடங்கப்பட்டது. அதை எக்கட்சியாரும் ஆதரிக்காமற் போகவே அதுவும் நிறுத்தப்பட்டது. கடைசியாக பிராமணத் தலைவர்களின் தூண்டுதலின் பேரில் குதியாட்டம் போடுகிறார்கள்.

இந்த நீல்உருவச் சிலையிருப்பதினால் எங்சமத்தர் என்ன துன்பத்தையடைகிறார்கள்? அந்த உருவச் சிலையைத் தகர்த்துவிட்டால் யாருடைய துன்பம் ஒழியப்போகிறது? நமக்கு சுயமரியாதை வருகிறதா? சுயராஜ்யம் வருகிறதா? உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற தத்துவம் மறைந்துவிடுகிறதா? பிராமணீயம்தொலைப்போகின்றதா? இதனால் நமக்கு ஒன்றும் விளங்கவில்லை. எந்தபிராமணத் தலைவராவது முன் வருகிறார்களா?

தமிழர்களே!

நம் இந்திய நாட்டில் பாழான பிராமணர்கள் வரைந்துள்ள பொய்க் கதைகளையும், சூழ்ச்சிகளையும் நீக்கினீர்களா? எல்லாப்பிறப்புகளுக்குள்ளும் மானிடப்பிறவிசாலவும்சிறந்ததன்றோ! சிறப்புக்குரித்தான மக்கட் பிறப்புதானே ஆதிதிராவிடர்களும்? பின்என் அவர்களை ஆலயங்களுக்குள் பிரவேசிக்கக்கூடாதென்றும் இவர்கள் தாழ்த்தப்பட்டவர்களென்றும் ஒதுக்கவேண்டும்? இதற்கடிப்படையாக பிராமணச் சூழ்ச்சியையும் அதன் காரணமாய் விளையும் மேல்ஜாதியாரெனப்படுவோரின்கொடுமைகளையும், அநியாயங்களையும், பார்க்கக் கண்ணில்லையா? அல்லது இவைகளைச் சீர்திருத்த இளம்வீரர்களுக்குக் கல்வி போதாதா? தேசபக்தி போதாதா? வீரம்போதாதா? இதிருப்பதைவிட்டுவிட்டுபறப்பதைப் பிடிக்கப்போனது போலிருக்கிறது.

பிராமணத் தலைவர்களின் வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டும், பிராமணத் தலைவர்களுக்கு அடிமையாயிருக்கும் பிராமணரல்லாத தலைவர்களின் பேச்சுகளைக் கேட்டுக்கொண்டும் பிராமணப் பத்திரிகைகளின் விளம்பரத்தைக் கண்டும் அந்தோ!பாவம்! நீல் உருவச் சிலையை உடைப்பதற்குப் பல ஊர்களிலிருந்து சில தொண்டர்கள் சென்னை சென்று ஏதேதோ பிரமாதப் படுத்துகிறார்கள். இதனால் பிராமணத்தலைவர்கள்ஆர்ப்பாட்டம் செய்து தனது பெயர்களை விளம்பரப்படுத்திக் கொள்ளுகிறார்கள்.

தென்னாட்டு இளம்வீர்களே!

இப்பொழுது நீங்கள் தலையிட்டுச் செய்யும் காரியம் பயனற்றது. இப்பொழுதே அதையை விட்டு விட்டு பயன்தரக்கூடிய காரியத்தை செய்ய முன்வாருங்கள். நமதுடன் பிறந்த சகோதரர் பலர் சம உரிமையின்றிப் பரிதப்பதறிவீர்களா? இதுவரையில் அதற்கு ஏதேனும் முயற்சியெடுத்துக் கொண்டீர்களா? நமது நாட்டுப் பிராமணக் கோவில்களைக் கைப்பற்றிக்கொண்டு நம்முடைய சுயமரியாதையை அபகரித்துக் கொண்டிருக்கின்றனர். அத்தகையவர்களுடன் போர்புரிந்து நமது மக்களின் சுயமரியாதையை நிலைநாட்ட வேண்டிச் சிறைசெல்வீர்களாயின் உண்மைத் தொண்டர் நீங்கள்தான் நானும் முன் செல்லுவேன். காப்பி கிளப்புகளுக்குச் சென்றால் சுய மரியாதையில்லை. சுபசுகசுபகாரியங்களிற்சுயமரியாதையின்றியிருக்கின்றோம். இத்தகைய காரியங்களை மேற்கொண்டு நடத்திச் சிறைக்குச் செல்வீர்களாயின் நீங்கள் சுயமரியாதை வீரர்களாவீர்கள்.

தென்னாட்டு இளம் சிங்கங்களே!

நீல் உருவச் சிலையை எடுத்துவிட வேண்டுமென்று எண்ணங்கொண்டு வீணை சிறைக்குப் போவதைக் காட்டிலும் பாரத நாட்டில் உள்ள மேற்கூறிய நீல் துரை, அக்காலத்தில் செய்த கொடுமையைக் காட்டிலும் இக்காலத்தில் கண் முன்பாக இருக்கும் கெடுந்தீவினைகளை நீக்க முயற்சி செய்ய கங்கணங்கட்டி வேலைசெய்து நீங்கள் சிறைபோவீர்களானால் அதனால் உங்களுக்குப் புகழ் உண்டாகுமென்பதில் சந்தேகமில்லை.

தென்னாட்டு சுய மரியாதை இளம் வீரர்களே!

சென்றவாரம் சிதம்பரம் என். தண்டபாணிபிள்ளை அவர்களும் மதுரை அருணாசலம் அவர்களும் அறிவித்த அறிக்கையைக் கவனித்தேன். அவசியம் தென்னாட்டில் ஏதாவது ஒரு இடத்தில் சத்தியாக்கிரகம் ஆரம்பித்து கிளர்ச்சி செய்யவேண்டும்.

தற்பொழுதுமுக்கியமாய் மதுரையில் தான் ஆரம்பிக்கவேண்டும். சென்னையில் பிற்பாடு பார்த்துகொள்ளலாம் முதலில் மதுரை கோவிலுக்குள் ஆதித்திராவிட சகோதரர்களைக் கூட்டிக்கொண்டு போகவேண்டும். இதைத் தான் பலமாக கிளர்ச்சிசெய்ய வேண்டும் சாப்பிகிளப் சத்தியாக்கிரகம் பிற்பாடு பார்த்துக் கொள்ளலாம்.

சத்தியாக்கிரகத்திற்குத் தலைமைபூண்டு நடத்துவதற்கு திரு. நாயக்கர் அவர்களையும், திரு. தண்டபாணிபிள்ளை அவர்களையும், திரு. கண்ணப்பர் அவர்களையும் கண்டிப்பாய் தலைமை வகிக்கச்செய்யக்கூடாது. என்ன காரணமென்றால் அவர்கள் வெளியிலிருந்து அனேக காரியங்கள் செய்யவேண்டும். அதற்காக அவர்களைத்தவிர இளம் வீரர்களுக்குள் தலைவரேற்படுத்தி நடத்தவேண்டும்.

பட்டுக்கோட்டை அழகிரிசாமி நாயுடுவையாவது, மாயவரம் லிங்கம் பிள்ளையையாவது தலைவராக்கி நடத்தினால் சித்தமாகக் கைகூடும். நாடார் இளம்வீரர்களும் திரள் திரளாக வரவேண்டும்; தக்க உதவியும் செய்யவேண்டும்.

எல்லா நாடார் மக்களும் வைக்கம் வீரர் ராமசாமிநாயக்கரைப் போல் கிளம்பவேண்டும். என்னுடைய விண்ணப்பத்தை தலைவர்கள் ஆழ்ந்து யோசனை செய்து ஒரு முடிவுக்கு வரவேண்டும். தற்சமயம் மதுரையில் இளம்வீரர்கள் போர் செய்வதற்குத் தயாராயிருக்கிறார்கள். மதுரை திரு. அருணாசலத்தின் மனமானது நெருப்பைப்போல் சுயமரியாதை உணர்ச்சித் தழல்கொண்டு எரிகிறது. அவரின் வேண்டுகோளுக்கு இணங்கி மதுரையிலே சத்தியாக்கிரகம் நடத்துவது முற்றும் சரி.

மதுரையில் சத்தியாக்கிரகம் ஆரம்பித்தவுடனே பல ஊர்களிலிருந்து திரள் திரளாக வீரர்கள் வரவேண்டும். ஒவ்வொரு சகோதரரும் சுய மரியாதைக்காக உடல், பொருள், ஆவி மூன்றையும் தத்தம் செய்ய பின் தாங்கக்கூடாது. நமது இயக்கத்திற்கு எல்லாம்வல்ல இறைவன் அருள்புரிவாராக.

சுயமரியாதை வீரர்களே எழுமின்!

ஆர். டி. எல்லணுயக்கர்,

ஈரோடு.

---

## திருமங்கலம்.

(நாடார் நிருபரிடமிருந்து)

### பத்திரிகை பகிஷ்கரிப்பு.

நமது குல முன்னேற்றத்தையும் நமக்கு ஆலய சமத்துவ சுதந்திரம் கொடுக்கவேண்டியது அவசியம் என்பதையும் வற்புறுத்திவரும் தென்னிந்தியாவில் திலகம்போல் விளங்கிவரும் நமது சுதேசமித்திரனை பகிஷ்கரிக்க வேண்டுமென்று கும்பகோணத்தில் கூடிய 11-வது நாடார் கான்பரன்சில் தீர்மானஞ் செய்ததைக் கேட்டு நிரம்பவும் விசனமடைகிறோம். விசால திருஷ்டியற்ற கக்ஷியினரான சில தலைவர்கள் தங்கள் சுகி நலத்திற்காய் ஓர் சமூக நலத்தின் விருத்தியையும் பலிகொடுத்துவிடுகின்றனரெனபது தற்காலம் நடக்கும் விபரீதங்களிலொன்றாகும். நாடார் சமூக ஆலயப்பிரவேச விஷயமாய் பிராமணர்களே வழி மறித்து நிற்பதாய் நினைப்பது சரிவர அறிந்துகொள்ளாமையேயாகும். மேற்படி பத்திரிகை பிராமணப் பத்திரிகை என்பதற்காகப்பகிஷ்காரம் செய்யப்பட்டதா? அப்படியாகில் நமக்கு பிராமணர்கள்பேரில் துவேஷம் வேண்டியதில்லை. நமக்கு மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களில் ஆலய சம சுதந்திரத்தில் குறுக்கிடுவது முக்கியமாக பிராமணரல்லாதாரெனச் சொல்லிக்கொள்ளும் பிராமணருக்கு அடுத்தபடியாயுள்ளவர்களேயென்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். தற்சமயம் தென்னிந்தியாவில சுற்றுப்பிரயாணம் செய்துவரும் உலக சிரேஷ்டரும், தெய்வப்பிறப்புமான மகாத்மா காந்தியவர்கள் ராஜபாளையத்திலும், கோவில்பட்டியிலும் நாடார்களுடைய உன்னத நிலைமையைப்பற்றியும் நாடார்களுக்கு மூன்று ஜில்லாக்களிலும் ஆலய சமசுதந்திரம் கொடுக்கவேண்டிய அவசியத்தைப் பற்றியும் நன்கு வற்புறுத்தியது இவ்விடத்திலுள்ள நாடார் சகோதரர்களுக்கும் நிரம்ப ஆறுதலைக் கொடுக்கிறது. இனிமேலாவது அன்னார் வாக்கை சிரமேற்கொண்டு, பிராமணரல்லாத சைவவேளாளர்களும், மற்றவர்களும், பிராமணர்களும், நாடார் ஆலய சமசுதந்திரத்தில், வேண்டிய முயற்சி எடுத்து, மேற்படி யார்களுக்குள்ள குறைகளை நீக்குவார்களென நம்புகிறோம். சென்ற வருஷம் மதுரையில் கூடிய பிராமணரலலாதார் மகாநாட்டில், நாடார்களுக்கு ஆலயப் பிரவேசம் அளிக்கவேண்டுமென எழுத்துத் தீர்மானம் செய்துவிட்டார்களே தவிர ஏதேனும் செய்கையில் காட்டினார்களா என்பது இன்னும் புலப்படவில்லை. நாடார் சகோதரர்களே! சுதேசமித்திரன் பேப்பரை அதிகமாக ஆதரிக்கும்படியும், பிராமணர்கள் பேரில் துவேஷமில்லாதிருக்கும்படியும் பிரார்த்திக்கிறேன். நமது நாடார் சமூகம் வளர்ச்சியடைவதற்கும், மூன்று ஜில்லாக்களிலுள்ள நாடார்களுக்கு ஆலய சமசுதந்திரம் வழங்கவும், ஆதித்தனைப்போல விளங்கும் சுதேசமித்திரன் தமிழ்ப்பத்திரிகையும், இந்து என்ற ஆங்கிலப்பத்திரிகையும், குளாபிமான மூன்ற நாடார் குல மித்திரன் வாரப்பத்திரிகையும் வேண்டிய பிரயாசையும், முயற்சியும் எடுக்குமெனவும் நிச்சயமாக நம்புகிறோம்.

### யூனியன்போர்டு எலெக்ஷன்.

விண்ணப்ப மூலமாகவும், பத்திரிகை வாயிலாயும் யூனியன் போர்டு ஊழலை எடுத்துரைத்து நிவர்த்திக்கும்படி கேட்டும் குறைகள் கவனிக்கப்படவேயில்லை. ரோம் தீப்பிடித்த பொழுது நீரோ என்பவன் வீணை வாசித்ததுபோல இவ்வூர் யூனியன் போர்டுமிருக்கிறது. 1928ஆ மார்ச்சீ எலெக்ஷன் நடைபெறப்போகிறது. சுகாதார விஷயம், ரோட் சீர்திருத்தம், வரி செலுத்துவோர்களுடைய நன்மைகளைக் கவனிக்கக்கூடியவர்களையும், சுயநலமில்லாதவர்களையும் வரும் எலெக்ஷனில் மெம்பர்களாகத் தேர்ந்தெடுக்கும்படி இவ்வூர் ஓட்டர்களுக்கு எச்சரிக்கைசெய்கிறோம். இவ்வூர் மேஜர் யூனியனாயிருந்தும் இன்னும் வார்டுகள் பிரிக்கப்படவில்லை. அதற்கு வேண்டிய முயற்சிகளை மெம்பர்களும் போர்டு பிரஸிடெண்டும் செய்வாரென நம்புகிறோம்.

---

## மதிப்புரை.

### மெவாதம்.

இப்பெயர்கொண்ட நூல்ஒன்று கிடைக்கப்பெற்றோம். இது எமதர்மராஜன் திருவாசு முனியை வக்கீலாகக்கொண்டு பரமசிவன் மீதும் மார்க்கண்டன் மீதும் வியாச்சியம் நடாத்தும் மாதிரியாக அமைக்கப் பட்டிருக்கிறது. வாசிப்பதற்கு வெகு அருமையாயுள்ளது. வக்கீல்களின் யுக்திவாதங்களெல்லாம் விளக்கி யிருக்கிறது. இதை இயற்றியவர் காம தகனக்கிரிமினல்கேசின் ஆசிரியர் கனம் எஸ். கே. ராமசாமி நாடாரவர்கள். விலை விலை அணா 12.

விலாசம்:—

எஸ். கே. ராமசாமிநாடார்.

நாகபட்டணம்.

### மதராஸின் மர்மம்.

இது ஓர் துப்பறியும் இனிய தமிழ் நாவல் "பட்டணத்தில் நடந்த படுகொலை", "மதராஸ் குதிரைப்பந்தயத்தில் நடந்த படுகொலை" என்னும் நிகரில்லா நாவல்களின் ஆசிரியர், கோலவாறு ஸ்ரீமான் ராமகிருஷ்ண நாயுடு அவர்களால் இயற்றப்பட்டது. விலை அணா 2.

சி. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு

நெ 7 விநாயக முதலி தெரு,

சௌக்கார் பேட்டை

மதராஸ்.

### சுத்த சாதகம்.

இது குமார தேவவள்ளலார் அருளிச்செய்த உண்மை மூர்த்தி நிலையுணர்த்தும் சைவ சித்தாந்த நூலாகும். சுமார் நூறு செய்யுட்களும் அதைப்பற்றிய வியாக்யானங்களும் அடங்கியுள்ளது. மக்கள் மனதூர்ப்மை அடையும் வண்ணம் புதுவை நந்தி வெளியீட்டு மன்றத்தவரால் பதிப்பிக்கப்பெற்றது. கீழ்க்கண்ட விலாசத்துக்கு 2 அணா தபால் ஸ்டாம்பு அனுப்பிப்பெற்றுக்கொள்ளலாம்.

நந்திபப்ளிஸிங்ஹௌஸ்

4. அம்பலத்தாடையர் வீதி,

புதுச்சேரி.

### நவராத்திரி உற்சவக்கும்மி.

இது திருமங்கலம் மகா-ள-ள-ஸ்ரீ சம. சிவசுப்பிரமணிய நாடாரவர்கள் விருப்பத்தின்படி கோப்பனாயக்கன் பட்டி மகா-ள-ள-ஸ்ரீ ப. ஆறுமுக நாடாரவர்களால் திருமங்கலம் பத்திரகாளியம்மன் மீது பாடப்பெற்றது. 48 பக்கமுள்ளது. நல்ல கிளேஸ்கடிதம். விரும்பியவர் உருவப்படமும் இணைக்கப்பட்டுள்ளது. ஆண் பெண் யாவரும் வாசிக்கத்தக்கது.

### கெட்டி இரும்புப் பெட்டி.

நமது பத்திரிகையில் விளம்பரம் செய்யப்பட்டிருக்கும் எஸ். பி. குமார நாடார் அன்சன்ஸ் இரும்புப் பெட்டிகளை நாம் நேரில் சோதித்துப் பார்த்திருக்கிறோம். கம்பெனியையும் பார்வையிட்டிருக்கிறோம். நாணயமும் நம்பிக்கையுமுள்ள கம்பெனியாகும். எல்லாப் பெட்டிகளும் புதுத்தட்டினால் செய்யப்படுகின்றன. கம்பெனியை பிரபலப்படுத்தும் பொருட்டு அதிகவேலைப்பாடுகள் செய்து சொற்ப லாபத்திற்கே கொடுத்து வருகிறார்கள். இரண்டு பெட்டிகள் நாம் வாங்கியும் பார்த்திருக்கிறோம். வர்த்தகர்கட்கும் லேவா தேவிக்காரர் கட்கும் ஏற்ற வலுவான பெட்டி. பந்தோபஸ்தில்லாத எந்த இடங்களிலும் பயமின்றி வைத்துக்கொள்ளும் பல ரகசிய அறைகளுள்ள பலமான பெட்டிகளாகும். எந்த அளவில் எந்த மாதிரிவேண்டுமானாலும் குறித்த காலத்தில் தயார்செய்து கொடுக்கும் நமது நாடார் கம்பெனிப்பெட்டிகளையே வாங்கி உபயோகிப்பது நன்று நன்று.

# 1-வது இளைஞர் மகாநாடு.

## வரவேற்புப் பிரசங்கமும் தீர்மானங்களும்.

சுயமரியாதை சத்தியாக்கிரகத்திற்காதரவு.

இளைஞர் சங்கங்கள் தீவிரமாய்ப் பெருக வேண்டும்.

கும்பகோணம், அக்டோபர் 2:—

நாடார் குல இளைஞர் முதலாவது மகாநாடு சான்பவுன்ஸ் கொட்டகையில் இன்று மாலை 9 மணிக்கு மிகு பரபரப்புடன் கூடியது. தலைவர்கள் விஜயஞ் செய்திருந்தனர். இளைஞர் மனதில் குதூகலமும், சந்தோஷ தாண்டவமாடின.

கூட்டம் ஆரம்பத்தில் ஸ்ரீமான் கே. ஜீ. வெங்கடாசலம்நாடாரவர்கள் கடவுள் வணக்கம்பாடின பின் வரவேற்புக் கமிட்டித் தலைவர் ஸ்ரீமான் பி. இரத்தினசாமி நாடார் அவர்கள் கீழ் கண்டவாறு தனது வரவேற்புப் பிரசங்கத்தைச் செய்தார்.

அன்புமிக்க எனது சகோதர நாடார் குல இளைஞர்களே!

எங்களது வேண்டுகோளுக் கிணங்கி இந்நாடார் இளைஞர் மகாநாட்டிற்கு விஜயம் செய்திருக்கும் மாபெரும் தலைவர்களுக்கும் பிரதிநிதிகளுக்கும் இளைஞர் மகாநாட்டின் வரவேற்புக் கழகத்தாரின் சார்பாக எனது மனமுவந்த வணக்கத்தை அறிவித்துக் கொள்ளுகின்றேன்.

உங்கள் வரவு நல்வரவாகுக.

உங்கள் வரவு வாலிபர்களுக்குப் புதிய உணர்ச்சியையும் சுயமரியாதை விருப்பத்தையும் சமூக விடுதலையையும் உண்டாக்கி விடுமென்பதைப் பெருமையுடன் உரைக்கின்றேன். ஜாதிய சேவையையே கடமையாகக்கொண்ட உங்கள் விஜயத்திற்கு எங்கள் சிற்றறிவால் செய்திருக்கும் ஏற்பாடுகளிலுள்ள குற்றங்குறைகளைப் பொறுத்துக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நம்குல இளைஞர் திலகங்களே!

இக்காலத்தில் எங்கும் புதிய புதிய உணர்ச்சிகளும் ஊக்கங்களும் காணப்படுகின்றன. நாமும் அவ்விஷயத்தில் ஈடுபட்டு மேன்மை அடையவேண்டும். இக்காலத்தில் இளைஞர்களால் தொடக்கப்பெறும் எந்த இயக்கமும் அதன் நோக்கத்தில் வெற்றியடையுமென்பதில் ஐயமில்லை. இன்று அயர்லாந்து, ஈஜிப்ட், ருஷியா, துருக்கி, ஜெர்மனி முதலிய நாடுகள் தற்காலம் விடுதலை பெற்று நம் நாட்டினர் கண்டு புகழ்வதற்குரிய நிலைமை அடைந்ததற்கு அந்நாட்டு இளைஞர்களே என்பதை சரித்திரவாயிலாய் நாம் நன்கு அறிகின்றோம். வாலிபர்களால் முடியாத காரியமென்று ஒன்று இருப்பதாக இக்காலத்தில் எவரும் எண்ணிற் பேதமையேயாகும். அதுபோல நாடும் நமது சமூகமும் விடுதலைபெற்று அனைவரும் ஒன்றுபட்டு இன்பவாழ்க்கையில் இருக்கவேண்டுமாயினும் மற்றெவ்வித நன்மை அடையவேண்டுமாயினும் அஃது நம்போன்ற இளைஞர்களால்தான் நிறைவேறக்கூடுமென்ற உண்மையை எவரும் மறுக்கார். ஆகவே இளைஞர்களாகிய நாம் செய்யவேண்டிய தேசத்தொண்டு சமூகத்தொண்டே ஆகும். அரசியலில் ஈடுபட்டுழைப்பது நமது சங்கத்தின் நோக்கமில்லை. ஏனெனில் தற்காலத்தில் தலைவர்கள் என்பவர்களில் பலர் பெரும்பாலும் அரசியற் புரட்டர்களும் தன்னல நோக்கமுள்ளவர்களுமாய் விளங்குகின்றனரென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல தெற்றென விளங்குகின்றது. அவ்வாறிருக்க அவர்களது கொள்கைகளைக் கடைப்பிடித்து நாமும் அவ்வரசியற் சேற்றில் விழாதிருப்பதே காலவியல்புக்கேற்ற செய்கையாகும். நாட்டிலுள்ள ஜாதி சமய வேறுபாடுகளையும் வர்ணாச்சிரம அதர்மத்தையும் அவைகளால் ஏற்பட்ட மூடக்கட்டுப்பாடுகளையும், பொருளற்ற சடங்குகளையும், கணக்கிலடங்காக் கொடுமைகளையும் தொலைத்து மேற்படி அக்ஞானத்தினின்று வெளியேறி ஆண்பிள்ளைகளென்போர் ஆளும்பிள்ளைகளாக ஆகவேண்டுமென்பதே நமது நோக்கமாக விருக்கிறது.

பெரியோர்களிடம் நான் வேண்டிச் சொல்வதொன்றுண்டு.

பெரியோர்களே!

நீங்கள் பொதுநலத்தில் ஈடுபட்டு உழைக்காவிட்டாலும், உங்கள் பிள்ளைகள் செய்யும் வேலையைத் தடைசெய்யாதீர்கள். காலச்சக்கரம் சுழன்று கொண்டிருக்கும்போது, குருட்டு, மூட, வைதீக, புரோகித கொடுமைகளில் இனி உங்கள் பிள்ளைகள் ஈடுபடப் போவதில்லை ஆயினும் நீங்கள் அவர்களுக்கு உதவி செய்யாவிட்டாலும் தடைசெய்யாமலிருக்க வேண்டிக் கொள்ளுகிறேன்.

நாடார்குல வாலிப நன்மணிகளே!

அசைவிலா ஊக்கமுடனும் தஞ்சா நெஞ்சுடனும் இடைவிடாதுழைத்து நமது சமூகத்தை முன்னேற்ற முயல்வோமாக. பள்ளிக்கூட மாணவர்களாகிய இளைஞர்களும் நம்முடன் ஈடுபட்டுழைத்து நகரங்கள் தோறும் கிராமங்கள் தோறும் நம் இளைஞர்கள் சங்கங்களை நிலைநாட்டி, நமது நோக்கத்தை நிறைவேற்ற முயல்வோமாக. இளைஞர்களாகிய நாம் முக்கியமாய்க் கவனிக்கவேண்டியதொன்றுண்டு. அஃது கல்வியேயாகும். "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்ற முதுமொழிக்கிணங்க நாம் ஒவ்வொருவரும் கல்வித்துறையில் தளரா முயற்சி கொண்டுழைத்து முன்னேற முயலவேண்டும்.

பத்திரிகை.

தற்கால உலகமிருக்கின்ற நிலைமையில் நம்போன்ற வாலிபர்கள் பத்திரிகை படித்தல் என்பதை ஓர் இன்றியமையாத சாதனமாய்க் கொள்ளல் வேண்டி ஏற்படுகிறது. ஏனெனில் க்ஷணத்திற்கு க்ஷணம் மனிதர் என்போர் அறிவில் விர்த்தியாகிக்கொண்டிருக்கும் இக்காலத்தில் பத்திரிகை படியாதவர்கள் பாமரமனிதர்களேயாவர். பத்திரிகை என்பது ராஜீய சமூக முதலிய அரிய விஷயங்களை உணர்த்துவதில் முக்கிய கருவியாயிருக்கிறது. ஆகையால் இளைஞர்களாகிய நாம் நமது சமூக முன்னேற்றத்திற்காக பெரிதும் உழைக்கும் "நாடார்குல மித்திரன்", "க்ஷத்திரிய மித்திரன்", "நாடார் நண்பன்" முதலியவைகளையும் மற்றும் "திராவிடன்", "குடிஅரசு", "ஜஸ்டிஸ்", "நவசக்தி", "தமிழ்நாடு" ஆகியவைகளையும் ஆதரிக்க வேண்டுமாய் உங்களனைவரையும் விண்ணப்பித்துக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சகோதர இளஞ் சிங்கங்களே!

இன்று நாம் பல பெரிய தலைவர்களின் அறிவுரைகளைக் கேட்கவேண்டியிருப்பதால் எனது சொற்களை இவ்வளவோடு நிறுத்திக்கொள்ளுகிறேன். இளைஞர் இயக்கத்தில் ஊக்கமெடுத்துக்கொண்டிருக்கும் உங்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை எனது வணக்கத்தைத்தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

பின் அருப்புக்கோட்டை "நாடார் குல மித்திரன்" ஆசிரியர் ஸ்ரீமான் ரு. ஆ. முத்து நாடார் அவர்கள் அக்கிராசனம் வகிக்கும்படியாக ஸ்ரீமான் வெங்கிடாசலநாடார் அவர்கள் பிரேரிக்க அதை விருதுநகர் ஸ்ரீமான் வே.வ. சண்முகநாடார் அவர்கள் ஆமோதிக்க மதுரை ஸ்ரீமான் ப. ரா. முத்துச்சாமி நாடார் அவர்கள் ஆதரிக்க ஸ்ரீமான் முத்து நாடார் அவர்கள் பெருத்த கரகோஷத்தினிடையே அக்கிராசனத்தமர்ந்து தமது தலைமைப் பிரசங்கத்தைச் செய்தார்கள். பின்னர் ஈரோடு ஸ்ரீமான் இராமசாமி நாயக்கரவர்கள் புரோகித பகிஷ்கார விஷயமாய்ப் பேசியபின் கீழ் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

### தீர்மானங்கள்.

1. நாடார் இளைஞர்கள் ஒவ்வொரு இடத்திலும், நாடார் இளைஞர் சங்கத்தை ஏற்படுத்தி, நமது மகாஜன சங்கத்தின் நோக்கத்தை நம்மவர்கள் பால் பரப்பி, நமது ஜாதியின் முன்னேற்றத்திற்காக பாடுபட வேண்டுமென்றும், நமது குலப் பத்திரிகைகளை ஆதரித்து விர்த்திசெய்யவேண்டுமென்றும் இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

திருவிதாங்கூர் "நாடார் நண்பன்" மானேஜர் ஸ்ரீமான் எம். வி. சாமி நாடார் அவர்களால் பிரேரிக்கப்பட்டு போடம்பட்டி ஸ்ரீமான் தி கருப்பையா பிள்ளையவர்களால் ஆமோதிக்கப்பட்டு நிறைவேறியது.

2. நமது சொந்த ஆலயங்களில் நம் குலத்தவர்களையே அர்ச்சகர்களாக நியமிக்கவும், நமது இல்லங்களில் நடைபெறும் சுப அசுப காரியங்களை நம் குலத்தவர்களைக்கொண்டே நடத்த வேண்டுமென்றும் இம் மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

திருமலாபுரம் ஸ்ரீமான் எஸ். ஆர். சாமிக்கண்ணுநாடார் அவர்களால் பிரேரிக்கப்பட்டு நாசரேத் ஸ்ரீமான் பி. எஸ். கனியப்பநாடார் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு நிறைவேறியது.

3. தற்பொழுது தமிழ்நாட்டில் தோன்றியிருக்கும் சுயமரியாதை சத்தியாக்கிரக இயக்கத்தை இம் மகாநாடு வரவேற்பதுடன், இதில் நம் இளைஞர்கள் பங்கெடுத்துக் கொள்ளும்படி இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

கும்பகோணம் ஸ்ரீமான் கே. ஜி. வெங்கிடாசல நாடார் அவர்களால் பிரேரிக்கப்பட்டு ஸ்ரீமான் எஸ். தங்கவேலுநாடார் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு நிறைவேறியது.

4. நம் தேசத்தின் பொருளாதார நிலைமையை முன்னிட்டும், கௌரவத்தைக்கருதியும், நமது நாட்டில் உற்பத்திசெய்யப்படும் கதர் வஸ்திரத்தையே ஒவ்வொருவரும் அணியவேண்டுமென்று இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

அருப்புக்கோட்டை ஸ்ரீமான் சொ. ஆ. சொக்கலிங்கபாண்டியர் அவர்கள் பிரரேபிக்க சங்கம் காரியதரிசி ஸ்ரீமான் பா. மா. பாண்டியநாடார் அவர்கள் ஆமோதிக்க தீர்மானம் நிறைவேறியது.

முடிவுரையாக அக்கிராசனர் பேசியவுடன் வந்தனோபசாரத்துடன் மகாநாடு இனிது முடிவுபெற்றது.

---

நாடார் இளைஞர்களே!
உங்கள் உற்சாகம் மென்மேலும் பெருகுவதாகுக.

நம் சமூகாபிவிர்த்தியில் புதிய சீர்திருத்தங்கள் செய்ய தங்கள் வேலைத் திறனை காட்டுங்கள்.

நாடார் சமூகம் தங்களை பொதுவாய் விரும்பி யழைக்கின்றது.

சுயமரியாதைத் தென்றல் எங்கும்வீசும்படி செய்யுங்கள்.

---

## "கொலை செய்யா திருப்பாயாக"

(அருப்புக்கோட்டை ஜீவகருண்யப் பிரசாரசபையிலிருந்து.)

"கொலை செய்யாதிருப்பாயாக" என்பது இயேசு கிறிஸ்துவின் பத்துக் கட்டளைகளில் ஒன்று. மனிதர்களின் பாவமன்னிப்புக்காக அவதாரஞ் செய்தவராய்க் கருதப்படுகிற ஒருவர், மனிதர்களுக்குக்கூறிய முக்கியமானதும், அவசியம் கைக்கொள்ள வேண்டுவதுமான உபதேசங்களுள், கொலை செய்யாமையும் ஒன்றென்பதை கிறிஸ்தவர்களும், முக்கியமாய் ஹிந்துக்களும், நன்றாய் சிந்தனை செய்யவேண்டியது அவசியம். பகவான் கௌதம புத்தரும் "அஹிம்ஸா பரமோதர்ம:" என்று கூறியுள்ளார். அதாவது எந்தஜீவர்களுக்கும் ஹிம்ஸை செய்யாமலிருப்பது தர்மங்களிலெல்லாஞ் சிறந்தது என்பதே அதன் பொருள். எப்போது, ஹிம்ஸை செய்யாமலிருப்பது தருமத்திற் சிறந்ததோ கொலை செய்யாதிருப்பது அதைப்பார்க்கிலும் எத்தனை மடங்கு உயர்ந்த தர்மமென்பதையும், கொலை செய்வது எத்தனை மடங்கு கொடிய பாவமென்பதையும் நாம் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும்.

இதனால் நாம் அறிந்துகொள்ள வேண்டியதென்னவெனில், எந்த மதமாயிருந்தாலும், கொலை செய்வதை ஒப்புக்கொள்ள வில்லையென்பதையும், கொலை செய்வது மானுடயாக்கையைப் பெற்ற யாவராயினும் செய்யத்தகாதது என்பதுயல்லவா?

பின்னையேன் ஹிந்துமக்கள், காளி என்றும், கருப்பனென்றும், சுடலைமாடனென்றும், பேச்சியம்மாளென்றும், மலையரசனென்றும், மாரியம்மாளென்றும் பலவித தெய்வபேதங்களையேற்படுத்தி அவைகளுக்கு ஆடு, கோழி, பன்றி முதலிய ஜீவப்பிராணிகளைக் கொலை செய்து, அதனால் மேற்கண்ட தெய்வங்கள்சந்தோஷித்து அருள் செய்வதாய் நம்புகிறார்கள் என்பதை நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டுமல்லவா? பலி என்பதற்கு கொலைக்கும், பிச்சைக்கும் இன்னும் பல பெயர்ச் சொற்களுக்கும் பொது அர்த்தமுண்டு. சர்வலோக நாயகனான பரமேஸ்வரனே, தாருகாவனத்தில் பலியேற்றதாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர் ஏற்ற பலி ரிஷிபத்தினிகளால் இடப்பட்ட அன்னத்தைக் குறிப்பிட்டிருக்கிறதே தவிர, மிருகங்களையும், பறவைகளையுங்கொன்று அவற்றின் ஊனைப் படைத்ததாகவில்லையே. அவ்விசுவரனே மற்றத்தேவதைகளும் ஏன் ஒரு காலத்தில் பிச்சை எடுத்திருக்கக்கூடாது? அரைப்படிப்புக்கார மதாச்சாரிகள், அல்லது வேஷதாரிகள் தங்களுக்கே அர்த்தம் தெரியாமல் பலி என்றால் பிராஜீவராசிகளைக் கொலைசெய்து அவற்றின் ஊனை வடிப்பது என்று அர்த்தஞ்செய்து நம்மை அகோரத்திற்கு ஆளாக்கிவிட்டார்களென்பதற்கு ஐயமே இல்லை.

ஏனெனின், ஹிந்துமதம் பஞ்சமஹா பாதகங்களென்று குறிப்பிட்டவைகளுள் கொலை தான் முதலில் வைத்தெண்ணப் பட்டிருக்கின்றது. பாதகங்களுக்கெல்லாம் தலையாயதும், மனிதனுடைய இளகிய மனதை கல்லாகச்செய்வதும் அன்புநெறிக்குவிரோதமானதுமான கொலையால் சந்தோஷிப்பதைத தெய்வங்களென்று சொல்லமுடியாது. அத்தேவதைகளிடத்தில் தெய்வத்தன்மையு மிருக்கமுடியாது. ஆகையால் தெரியாத்தனத்தால் யாரோ ஒரு பாதகக்கூட்டத்தார் கொலை செய்வதால் தெய்வங்கள் திருப்தியடைவதாய்ச் சொல்லி நம்மையேமாற்றி விட்டார்களென்பதை யறிந்து நாம் அன்புநெறிப்பற்றி நடப்போமாக. கொலையால் வரும் பாவம் நம்மைத் தொடராதிருக்கும்படி எவ்வுயிரையும் கொலை செய்யாதிருப்போமாக. சகலலோக நாயகனாகிய பகவான் நமக்கு சாந்தத்தையருளி உண்மையை யறிந்துநடக்க அருள் புரிவானாக.

கொல்லா விரதமொன்று கொண்ட வர்நல்லோர்மற்
றல்லாதார் யாரோ அறியேன் பராபரமே—தாயுமான சுவாமிகள்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



# நாடார் இளைஞர் மகாநாடு.

## பத்திராதிபர் ஸ்ரீமான்
## சூ. ஆ. முத்து நாடாரவர்கள்
## நிகழ்த்திய தலைமைப் பேருரை.

**தியாக குணமின்றி நமது வாழ்க்கை சீர்ப்படாது.**

**ஆங்கிலமல்ல, தமிழல்ல ஒழுக்கமுள்ள கல்வியே உயிர்க் கல்வியாகும்.**

**ஒருவர்க்கு மாதா பிதா சோதரர் போன்றும் ஜாதியும், மதமும், தேசமும்.**

**முற்காலப் பெரியோர்களும், தற்கால இளைஞர்களும் கூடுமிடத்து சமூகப் பற்றுதல் வளர்தல் வேண்டும்.**

ஆத்ம நண்பர்களே !

எல்லா நல்வளப்பங்களும் பொருந்திய இந்த தஞ்சைஜில்லாவில் முதலாவது நடக்கும் நாடார்இளைஞர் மகாநாட்டிற்கு நீங்கள் என்னை அக்கிராசனராகத் தெரிந்தெடுத்ததற்கு உங்களுக்கெல்லாம் எனது மனப் பூரணமான வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

நாடார் மகாஜன சங்கத்தையே அடிகோலிய, குலாபிமானிகள் நிறைந்த இத்தஞ்சை ஜில்லாவிலேயே ஒரு பெரியாரைத் தலைவராகத் தெரிந்தெடுத்துக் கொண்டிருக்கலாம். ஆனால் நான் சிறிது காலமாகச் செய்துவரும் குலசேவையைப் பெருமைப் படுத்தவோ, என்மீதுள்ள அன்பினாலோ என்னைத் தெரிந்தெடுத் திருக்கிறீர்களென்று நம்புகிறேன். என்னை தலைவராக இருக்கவேண்டுமென்று கேட்டபோது நான் அவ்வளவு தைரியமில்லாமலே இசைந்தேன். நான் செய்துவரும் தொழில்களானது என் கால முழுவதையும் செலவிடக் கேட்கும் பொறுமை கொண்ட எஜமானியாம். உங்களுடைய அன்பினால் எனக்குக் கிடைத்திருக்கும் பொறுப்பேறின உயர்ந்த அந்தஸ்தைப் பற்றின கடமைகளைச் செய்வதற்கு போக்கியதை தரத்தக்க பயிற்சி உண்டாவென்று பின் வாங்க முடியவில்லை. நீங்கள் எனக்களித்திருக்கும் பெருமையினால் எவ்வளவு சந்தோஷமடைகிறேனோ அதைவிட எனக்கு உங்களால் உண்டான கௌரவத்தின் சுமை என்னைப் பாதிக்கின்றது. நான் அக்கிராசனாதிபதியாக ஏற்ற கடமைகளை எவ்வாறு நீங்கள் மதித்திருக்கிறீர்களோ, அவ்வாறாக உண்மையில் செலுத்திக்காட்டத் தவறினாலும் என் குறைகளைப் பொறுப்பீர்களென்று நம்பி மறுமுறையும் உங்களுக்கு வந்தனஞ் செலுத்துகிறேன்.

அன்பர்களே !

ஐரோப்பாவில் நடந்த பெரிய யுத்தமானது சர்வதேசங்களையும் விடுதலை, விடுதலையென்று கூவித் தட்டி எழுப்பி விட்டிருக்கிறது. அந்நாள் முதல் இந்நாள் வரையும் நமது தேசத்தில் பல பல வெழுச்சிகள் தோன்றி வந்திருக்கின்றன. இப்போது இளைஞரியக்கம் ஒன்று எங்கும் வெகு பரபரப்புடன் உதித்து வருகிறது. அவர்கள் உள்ளங்களிற் சுயமரியாதை, சுயமரியாதை என்ற சப்தம் தொனிக்கின்றது. இது சமயம் ஜெர்மனியில் இளைஞர் எழுச்சியும் பொருள் காட்சிச் சிறப்பும் எவ்வாறுள்ளனவென்று ஒரு நிருபர் ஆங்கிலப்பத்திரிகை யொன்றில் பின்வருமாறு எழுதியிருப்பதின் சாராம்சத்தை நீங்கள் நன்கு கவனிக்கவேண்டுகிறேன். ஜெர்மனியின் தற்கால உணர்ச்சி நிலையை அறிந்துகொள்ள விரும்புகிறவர்கள் இப்போது பெர்லினில் பெல்வியு மாளிகையிலே நடைபெறும் ஜெர்மன் இளைஞர் காட்சியைப் போய் பார்வையிடவேண்டும். இளைஞர் காட்சி என்ற மாத்திரத்திலே உருண்டு திரண்ட புஜங்களும் விரிந்த மார்புமுள்ள கண்டுக்குட்டிகள் போன்ற ஜெர்மன் இளைஞர்கள் அந்த காட்சிக்கு நிறுத்தி வைக்கப் பட்டிருக்கவில்லை. ஆனால் ஜெர்மன் இளைஞர் எழுச்சியின் நோக்கங்களையும், உணர்ச்சியையும், அவர்கள் வாழ்க்கை நிலைமைகளையும் தெளிவாய் எடுத்துக் காட்டுகிற படங்களும், சித்திரங்களும், திட்டங்களும், கட்டடப் பிளான்களும் அதில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. இப்போது ஜெர்மனியில் பையன்களுக்குள்ளும் சிறு பெண்களுக்குள்ளும் காணப்படுகிற தேசிய உணர்ச்சியும் வாழ்க்கைமேல் நம்பிக்கையும்போல் ஐரோப்பாவில் வேறெந்தநாட்டிலும், இத்தாலிதேசத்திலும்கூட காணப்படவில்லை. இந்தக் காட்சியில் நாம் ஜெர்மன் இளைஞரை ஜெர்மன்கள் மூலமாய் அதாவது ஜெர்மனியர் கருதுகிறபடி காணலாம். அந்தக்காட்சி வேடிக்கையாக நடத்தப்படாமல் மிகவும் ஆழ்ந்த மனப்பான்மையுடன் நடத்தப்படுவதாக அதைப் பார்க்கிற இங்கிலீஷ்காரர் மனதில் படும். இங்கிலாந்தில் நடக்கிற சாரணர் படைக் காட்சி அல்லது இத்தாலியில் நடக்கும் இளைஞர் காட்சிகளுக்கும் இந்த ஜெர்மன் இளைஞர் காட்சிக்கும் வெகுதூரம். ஜெர்மன் இளைஞர் காட்சியிலே ஒவ்வொரு விஷயத்திலும் ஜெர்மனியருக்கு இயற்கையாகவுள்ள தத்துவக்கொள்கைகளையும் அழகையும் வாழ்க்கை நிலைமையில் கொண்டு வருவதற்கான மனப்பூர்வமான பெருமுயற்சி செய்யப் படுகிறதென்று தோன்றுகிறது. ஜெர்மனியிலுள்ள ஒரு கோடி இளைஞர்களிலே 40 லட்சம் பையன்களும் பெண்களும் சேர்ந்திருக்கிற ஸ்தாபனங்களெல்லாம் ஒன்று கூடி இந்தக் காட்சியை நடத்துவதாகச் சொல்லப்படுகிறது. ஜெர்மன் இளைஞர் இயக்கம் எல்லாரும் சுறுசுறுப்பான வாழ்க்கையையும் அதிக மதிகமான வாழ்க்கை நலன்களையும் பெற முயற்சிக்க வேண்டுமென்று லக்ஷ்யகணக்கான பையன்களுக்கும் பெண்களுக்கும் ஊக்கம் கொடுக்கும் முயற்சியாகத் தோன்றுகிறது. இவ்வாறுலக மொத்தத்திலும் இளைஞர்கள் புத்தெழுச்சி யுண்டாயிருக்கும்போது நாடாருலகத்திலும் அப்பிரதிபொலிபரவி யிருப்பது மிகவும் பொருத்தமுடையதே. ஆனால் நம் நாட்டிளைஞர் கூட்டத்தை நடத்தப்போகிற தலைவர்கள் யாரென்று இன்னும் சரியாகத் தெரியவில்லை. அவர்கள் சரியான தலைவர்களைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். நீங்களும் கட்டுப்பாட்டுடன் உங்களுக்கு நல்வழி காட்டும் தலைவர்களை நாட வேண்டும். அவர்கள் சொற்படி நடக்கவும் வேண்டும். தலைவர்களுக்கு அடங்கி நடப்பதே சாலச்சிறந்தது. அது உங்கள் வாழ்க்கையை மிகவும் பரிமளிக்கச் செய்யுமென்பதில் ஆக்ஷேபணையில்லை. நமது வாழ்க்கை பொதுவாக சர்வஜீவ ராசிகளும் தங்கள் தங்கள் வாழ்க்கை நலத்தை விருத்திசெய்து கொள்வதற்குப் பிரயத்தனங்கள் செய்வதன்றிஒன்றேனும்தன்னை தாழ்த்திக்கொள்வதற்கு சம்மதிப்பதில்லை. மனுஷ்யஜாதி மகாமேன்மையுடையது. அந்த ஜாதி மென்மேலும் விருத்தியடையவேண்டிய பல முறைகளை பெரியோர்கள் ஆராய்ச்சிசெய்து எழுதிவைத்திருக்கிறார்கள். அம்முறை செம்முறையென்றே அனுஷ்டித்து வந்திருக்கிறார்களாயினும் நமது தேசத்தில் அன்னியர்கள் வந்து அதிகமாய்ச் சேரச் சேர இந்திய மனுஷ வாழ்க்கையில் அனேகமாறுதல்களேற்பட்டு வந்திருக்கின்றன. என்னென்ன மாறுதல்கள் உண்டானபோதிலும் அந்தந்தக் காலங்களிலுண்டாயிருந்த பெரியோர்களின் சலியா முயற்சியினாலே இந்தியாவின் ஜீவநாடி குறைந்து போகாமலே காக்கப்பட்டு வந்திருக்கிறது. மேல் நாட்டு நாகரீக வெள்ளம் மெதுவாய் நம் தேசத்திற்புகுந்து ஜீவநாடி சிதைந்து போகச்செய்த முன்னொரு சமயத்தில் வேதாந்த பக்த சிரோமணிகளாகிய சுவாமி விவேகாநந்தர் இராம தீர்த்தர் முதலான தீர்க்கதரிசிகள் காப்பாற்றி வைத்திருக்கிறார்கள். தற்போது இந்திய அரசியல் முறையில் நமது தேசம் ஆனையுண்ட விளாங்கனிக்குச் சமானமாயிருக்கிறதென்ற தத்வார்த்தையைக் கண்டறிந்த மகாத்மா காந்தி அந்நோயை அகற்றும் மருந்தை ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்திருக்கிறார். தோன்றும் பொருளனைத்தும் மறையுந்தன்மையுளது. மனித வாழ்க்கையை மேற்கொண்டு போவதற்கு சாதகமாகத் தர்மம் வரையுறுத்தும். அதைக் கீழ்நோக்கி பாதாளத்திற்றள்ள அதர்மம் எதிர்மறையாய் விளங்கும். நாம் தர்மிகளாயிருந்து வாழ்வதா, அதர்மிகளாயிருந்து சாவதாவென்று நமது தேசத்தாரை மகாத்மா கேட்டுக்கொண்டிருக்கிறார். அதற்கு இணங்குவதா, பிணங்குவதா வென்று ஒரு சார்பார் விழித்துக்கொண்டிருந்தாலும் அவருடைய விசாலமான பட்சமாதமற்ற சாமான்ய வாழ்க்கையை உலகமே ஒப்புக் கொண்டுவிட்டது. ஆகையால் ஆடம்பரமற்ற தன்மையிலும் அடக்கம், ஒழுக்கம், தியாகம் முதலானகொள்கைகளிலுமே மனிதவாழ்க்கையின் உயர்வு அடங்கிக் கிடக்கிறது என்பதை நாம் கண்டுணரவேண்டும். உண்மை ஒன்றுதான் அழியாப்பொருள். அதுதான் ஈசான். அதற்குப் பல நாமங்கள் வழங்கலாம். அதன் தன் உண்மைகளைக் கண்டுணர வேண்டும். தியாக குணமின்றி நமது வாழ்க்கை சீர்ப்படுவதுமகாதுர்லபமாகும். டாம்பீகத் தன்மையை ஒழித்து கபடமின்றி வாழ்வதையே வாழ்க்கையின் முக்கியமென்று உணர்ந்து நடக்கவேண்டும். பிறப்பென்னும் பெரும் பிணிவாய்ப்பட்டு உலகில் அலைந்து இறக்கு முன்னர் நாம் செய்யவேண்டிய கடமை யாது என்பதை ஒவ்வொருவரும் சிந்தித்துப்பார்க்க வேண்டிய அவசியம். எல்லாச் ஜீவர்களுக்கும் கடமையுண்டு. நம்மைப்போலவே எல்லா ஜீவர்களுக்கும் உண்பன, தின்பன, சுகிப்பன, மகப்பேறுபெறுவன யாவும் உண்டு. நன்றிது, தீதிது வென்று பாகுபாடு கண்டுணர்வதல்லவோ மனிதர்கடமை? மற்ற ஜீவர்களைப் பார்க்கிலும் மனிதருக்குப் பல் வேறு கடமைகளுண்டென்பது நீங்களறியாததல்ல. ஒருவன் ஒரு கடமையைச் செய்யும்போது மற்றொருகடமைவந்து முரண்படுத்துவதுண்டு. அதிற்றேறிற்றெளிவதே மனிதன் கடமை. தற்கால நிலைமையில் நம்முடைய ஜாதிக்கு உழைக்கவேண்டிய கடமையே முக்கியமான கடமையாகக் கொள்ள வேண்டியதிருக்கிறது. நமது ஜாதியும் தேசத்தின் ஒரு அங்கமாகையால் நாம் நமது ஜாதிக்குச் செய்யுங்கடமைகள் தேசத்துக்குஞ் செய்வதேயாகும். இதை நாம் மறந்துபோய் சோம்பியிருந்துவிடக்கூடாது. வெகுவேகமாய்ச் சுற்றிவருகிற காலச்சக்கரமானது ஒவ்வொரு தேசத்தாரையுமே சோதனை செய்து வந்து கொண்டிருக்கிறது. தூங்கிக்கொண்டிருப்பவர்களையும், சோம்பித் திரிபவர்களையும், அது சும்மா விடுவதில்லை. அவர்கள் தலைகளையே துண்டித்து விடுமென்றுஞ் சொல்லலாம். மோட்டார் வாகனங்கள் நாடெங்கும் ஓடித் திரிகின்றன. ஆகாய விமானங்கள் பறக்க ஆரம்பித்துவிட்டன. இவைகளோடு கட்டை வண்டிக்காரன் போட்டி போட முடியுமா? மனிதர்களின் கால் மூளையின் விருத்தியைமோட்டார் வாகனங்கள் எவ்வளவு கெடுத்துவிட்ட போதிலும் ஜனங்கள் அதிற்றான் ஏறப்பிரியப் படுகிறார்கள். அவ்வளவு துரிதமாகவும் சோம்பலாகவுமாய் விட்டது மனிதவாழ்க்கை இந்நிலைமையில் நாம் ஊர்ந்து செல்வோமாகில் மெத்தப் பின் தங்கிவிடுவோம். பந்தியிலிடமின்றி பரிதவிக்க நேரிடும். ஆகையால் நாம் ஒவ்வொருவரும் குடும்பக் கடமையைப் பார்க்கிலும் குலக்கடமையைப் பெரிதாய்ப் பாவிக்கக் கடமைபட்டிருக்கிறோம். தேசக் கடமையிலும் நம்முடைய பங்குவிட்டுப் போகக்கூடாது. தேசம் அவசியம் என்ற காலத்தில் ஜாதியை விட்டுவிட வேண்டும். உதாரணமாகக் காவேரியில் அணைகடந்த வெள்ளம் வந்து ஊரை அடித்துக் கொண்டுபோகும் சந்தர்ப்பத்தில் அடுத்தாற் போலிருக்கும் ஐயங்கார் வீடுதானே போகும்; நமக்

(இதன் தொடர்பு ஆ. பக்கம் பார்க்க.)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



(அ. பக்கத்தின் தொடர்பு.)

நென்ன வென வளாவிருந்தால் நம்முடைய வீடென்று வெள்ளம் விட்டுவைக்க மாட்டாதன்றோ? நமது பாரத நாட்டின் சேமத்திற்கு ஆதாரமாயுள்ள செல்வம் போய் விட்டால் நாமும் ஜீவித்திருக்க முடியாது. ஆகையால் நம் நாட்டில் செல்வ நிலைமையைச் சாண்டிக் கடிக்கும் பெருவாய்ப் பேய் பிடித்து தரித்திரநோய் அதிகப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதை தீர்க்கும் மருந்து மகாத்மா சொல்லும் மருந்தே அருமருந்து. அம் மருந்தை நாமும் செம்மையுடன் உபயோகிப்பதே நமது நாட்டுக்கு நாம செய்யவேண்டிய தற்காலக் கடமையாம். நாம் உண்மையில் க்ஷத்திரியரென்று சொல்கிறோம். நம் ஜாதி நம் தேசம் ஆகிய இவைகளில் நம் கடமைப் பாட்டினால் நமக்கென்ன ஆபத்தேற்பட்டபோதிலும் நாம் பின்வாங்கக் கூடாது. என்றைக்கிருந்தாலும் இறப்பதே நிச்சயமென்று பயமின்மையைக் கொள்வதே ஆண்மைத் தனமும் க்ஷத்திரியத் தன்மையுமாகும். முள் முனையில் நின்றுண்ட விட்டில்மீது படசங் கொண்ட வீரன் போர்முனையில் என் செய்வானென்பதை நீங்கள் எண்ணிப்பாருங்கள் நாடு காலாட் படையைக் காக்க ஒரு பீரங்கி தீர்ப்போன் தன்னுயிரைப் பலி கொடுக்கிறான். அதுபோல் நமது ஜாதியையும், தேசத்தையும் காக்க வேண்டி நம் முயிரும் பெரிதல்லவென்ற தைரியத்தை நாமொருபோதும் இழந்து விடக் கூடாது. இவ்வகை தீவிரமான பக்குவம் நம்மிளைஞர் மனத்திலேயே எழும்பவேண்டும். அதற்கு நீங்கள் என் செய்யவேண்டும்? கல்வியை நீங்கள் பூரணமாய் கற்பிக்கவேண்டும். சர்க்கரை தித்திக்குமென்று ஒருவருக்கும் சொல்லவேண்டிய நிலையில்லையென்பதுபோல் கல்வியாலுண்டாகும் நன்மையை நான் உங்களுக்குக் கற்பிக்க வேண்டிய தவசியமில்லை. எத்தக்கல்வி அவசியமென்று நான் உங்களுக்கு நிச்சயமாய்க் கூற முடியவில்லை. பாரமார்த்திக ஞானத்தை எழுப்ப வல்லமையற்ற ஆங்கிலப்பயிற்சி தேவையல்லவென்கிறார் மகாத்மா காந்தி. வெளிநாட்டுக்கல்வி வேண்டாமென்றால் நம் வீட்டிற்கு வெளியிலிருந்து காற்றுவரக் கூடாதென்று சாளரங்களை தாழ்ப்பாளிட்ட தொக்குமென்று சொல்கிறார் ரவீந்தரநாத்தாகூர். இதைப் பற்றி அவ்விருவரும் ஒரு முடிவுக்கு வராதிருக்கும்போது நாமென் சொல்வோம்? நமது வாழ்க்கைக் கின்றியமையாத எல்லாக் கல்விகளையும் கற்கவேண்டியது அவசியமே. தாய் பாஷையை மறந்து சபைகளில் தமிழில் பேசமுடியாமல் தத்தளித்து வெட்கமடையும் நிலைமைக்கு வந்துவிடக் கூடாது. விரிவான தமிழாராய்ச்சியே முதலாராய்ச்சியாகக் கொள்ளவேண்டும். ஒழுக்கம் நிறைந்த கல்வியே உயிருள்ள கல்வியாகும்.

இவைகளை நமது சமூகத்துக்குக் கற்பிப்பதற்கு நாடார்மஹாஜன சங்கம் நமக்குப் பிரதானமாய் விளங்கிவருகிறது. அச்சங்கத்தை இந்த ஜில்லாவிற் பிறந்த ஒரு பெரியாரே ஸ்தாபித்தாரென்பதை எப்போதும் மறக்கமுடியாது. அதனால் நாடார்ஜன சமூகம் பல வழிகளில் விழிப்பெய்தி இருக்கிறது அதன் அருமையும்பெருமையும் இளைஞர்களுடைய ஒற்றுமைப் பின்னலென்றுநீங்கள் மகிழ்ச்சியடையலாம். ஆனால் சங்கம் நிர்வாக சபையில் உங்களுடைய பிரதிநிதிகள் அதிகமாயில்லை. நீங்களனைவரும் அங்கத்தினராகி நிர்வாக சபையில் அதிகம் பேரிருந்து சமூக வேலைகளைப் பங்கெடுத்து நடத்த முன்வரவேண்டுகிறேன்.

மஹாஜன சங்கம் தற்போது சிறிது பல மற்றிருப்பதை நிவர்த்தி செய்து ஒரு புதிய சக்தியை உண்டுபண்ணுவதற்காக நமது தலைவர்கள் பெரிய முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள். அம் முயற்சியில் நீங்களே முதல் தரமாயிருக்கவேண்டுகிறேன். சங்கம் சார்பில் நடைபெற்றுவரும் கான்பரன்ஸ் ஒரு பெரும் ஆரவார கோலத்தைப்போலவும், தமாஷைப்போலவும் நடக்கிற தோற்றம்மறைந்து அமைதியுடனும் அறிவோடுங்கூடி காரியத்தில் கண்ணோட்டம் வைத்து வேலை செய்யக் காலணம் கட்டிவிட்டது. கான்பரன்ஸுக்கு தூரமான பல இடங்களிலுமிருந்து ஜனங்கள் வந்தபோதிலும் அவர்கள் பார்த்துவிட்டுப்போய் மற்றக் காலங்களில் செய்யவேண்டிய வேலைகளைச் செய்யவில்லை. ஜனங்களைச் செய்யும்படி தூண்டுதல் செய்ய பல இளைஞர்கள் கிடைக்கவில்லை ஒவ்வொரு ஜில்லாவிலும் இளைஞர்கள் பெரும் பாலுந்தோன்றி ஜனங்களைத் தட்டி எழுப்பி மகாஜன சங்கத்தின உருவான வேலைத்திட்டங்களை நிறைவேற்ற முனைந்து நின்றால் தலைவர்கள் வேறு பல மேலான காரியங்களைக் கவனித்துக்கொள்ள முடியும். ஜில்லா, தாலுகா, கிராமவாரியாய் கூட்டங்கள்கூட ஆலோசிக்கப் படவேண்டும். அதற்குரிய முயற்சிகளை ஆங்காங்குள்ள இளைஞர்கள் முன்னின்று நடத்தவேண்டும். பொதுஜன அபிப்பிராயங்களை உருவாக்க நம்முள் ஏற்பட்டிருக்கும் ஸ்தாபனங்களாலும் ஜனங்கள் சாமான்யமாய் ஒன்றுகூடிப் பழகுவதாலும் சுறுசுறுப்பை யுண்டு பண்ணிஉற்சாகத்தை யூட்டவேண்டும். வர வர நமது வல்லமையும் சந்தேகமின்றி வளர்ந்து மற்றவர்களுக்குங்கூட நன்மை பயக்குவதாயிருக்கும். நமது தாய்ச்சங்கத்தை ஒரு எஞ்ஜினாக வைத்துக்கொண்டு மற்ற சங்கங்களெல்லாம் அதன் கருவிகளாயிருந்து இளைஞர்கள் வேலை செய்து வரவேண்டும்.

நமது பொதுவான அபிப்பிராயங்கள் வருஷமெல்லாம் உருப்பெறறு தொனிக்கப்பட்டு வருகின்றன இன்னும் உங்களாலது பெருந்தொனியாகப் பிரயாசைப் படவேண்டும். அது உங்களால் கூடும். நமது ஜாதியார் நன்மைகளைக் கவனிக்கவும் அவ்வக்காலங்களில் தோன்றும் தேசப்பிரசினைகளைப் படித்தறியவும் சரியான இராஜாங்கக் கருத்துக்களை உணரவும் கிராமந் தோறும் நீங்கள் பிரசாரம் பண்ண முன் வரவேண்டும்.

அவ்வழியில் நமது வகுப்பினரை உருவாக்க நீங்கள் உறுதி செய்து கொள்ளவேண்டும். உங்கள் கட்டுப்பாடும் உறுதியும் வலிமையும் எவ்வளவென்ற அளவுகோலாக நமது வகுப்பும் நம் நாடும் மேன்பாடு பெற்றிருக்கவேண்டும். நமது தாய்ச் சங்கத்திற்கு இப்போது அதிகமான அங்கத்தினர்களில்லை. நமதொவ்வொரு சங்கத்திலும் மெம்பர்கள் தொகையை வருஷந்தோறும் பெருக்கவேண்டும். பெரியவர்கள் இந்த வேலைகளை எவ்வளவு துரிதமாய்ச் செய்து வந்தபோதிலும் அதைப் பயன்பெறத்தக்க முறையில் துரிதமாய்ச் செய்வதற்கு சமூக ஊழிய இளைஞர்கள் அதிகமாய் வேண்டியதிருக்கிறது. ஆங்கிலம் அறிந்த சில வாலிபர்கள் பழைய தலைப்பாகட்டிப் பெரியவர்கள் எவ்வளவு அனுபவமும் அறிவுமுடையவர்களாயிருந்தாலும் அவர்களோடு உறவாடி ஒத்துழைக்க சங்கோசப்படுகிறார்கள். அவர்களும்இவனென்ன சிறுவன்; பி. ஏ. என்ற இரண்டு கோணெழுத்துகள் மேலேறிவிட்டால் பெரிய மனிதனாய் விடுவானோவென்று அலட்சியமாய் நினைத்துத் தள்ளிவிடுகிறார்கள்.

முற்கால அனுபோகமும் தற்காலப்போக்கும் ஒத்துவர முடியாமல் சில சமயங்களில் சமூக வேலைகள் தடைப்பட்டுவிடுகின்றன. தேசமே இம்மோசமான நிலைமையிலிருக்கிறது. இருதாப்பார்க்குள்ளும் இவ்விகற்பங்கள் ஒழியவேண்டும். அத்தகைய இளைஞர்கள் நமது 2-வது மகாநாட்டில் தலைமை வகித்த ஸ்ரீ. சங்கரநாயரவர்கள் நமக்கு முன்னால் வேலை செய்த பெரியவர்களைப்பற்றி என்ன சொல்லியிருக்கிறாரென்பதைப் படித்துப் பார்க்கும்படி வேண்டுகிறேன்.

(அபார வேலை செய்யக்கூடிய வாலிபர்களிருக்கலாம். பெரியவர்களாலாகாத பெரிய காரியங்களையும் செய்யும் வல்லமை பெற்றவர்களாயிருக்கலாம். நீங்கள் எங்கள் விந்தலைக்கு ரக்ஷகரென்று எல்லோரும் கைகட்டி நிற்கும் பாக்கியவான்களாயுமிருக்கலாம்; ஆனால் அவர்களால் எழுப்பப்படுகிற கட்டடம் யாரால் அஸ்திபாரமிட்டு வைக்கப்பட்டதின் மேல் எழுப்புகிறோமென்று சிந்தித்து அஸ்திபாரமிட்ட பெரியோர்களுக்கு நன்றி செலுத்தவேண்டும்.) மேலும் நாம்யார்; நாம் எங்கிருந்து வந்தோம்; இனி யெங்கே செல்வோம்; இங்கிருக்கும் போது நாம் செய்யவேண்டிய கடமையாது எனமேல் நோக்கிச் சிந்தித்தால் மருட்சியும் வெகுளியும் விலகி இது நமது கடமையென்பதை உணர ஹேதுவுண்டாகும். சென்ற இரண்டு வருஷங்களுக்கு முன்னர் சமூக ஊழிய இளைஞருலகம் வெகு வேகமுடன் சீறிக்கொண்டு வெளியேறிவந்து பலமான தன்னுணர்ச்சியுடன் சமாதான வழியிலேயே நமது உரிமைகளைப்பெற மிகுந்த ஆவலுடனும் ஆர்வமுடனும் தலை தூக்கி நின்றது. தேசாபிமானிகளாகிய நலலோர் பலர் அதை வாழ்த்தி வரவேற்றார்கள். ஆனால் நமது பெரியோர்கள் கல்லுமுள்ளுமடர்ந்த பிரதேசத்தில் பயமறியாக்காளைகளாகிய உங்களை தனியாயனுப்பப்பிரியமில்லை யென்று சொல்லிவிட்டார்கள். மூத்தோர் சொல்வார்த்தை அமிர்தம் என்ற முறையில் நாகபாசக்கணைபோல் அவர்கள் வேகத்தையெல்லாம் அடக்கிக் கொண்டிருக்கிறார்கள். எனது சுற்றுப்பிரயாண அனுபோகத்தில் அவர்களுக்கும் கூடிய சீக்கிரத்தில் வேலை கிடைக்கும் என்று நினைக்கிறேன். வருங்காலத்தை எதிர்நோக்கியவர்கள் அடங்கியிருப்பதில் அவர்கள் சக்தி வரவர விருத்தியாகி வருமென்பதிற் சந்தேகமில்லை. மகாஜன சங்கம் ஏற்றுக்கொள்ளாத எந்த வேலையும் தனிப்பட்டுச் செய்வதில் மிகுந்த ஆபத்திருக்கிறது. சங்கத்தையே தன்மயமாக்கிவிடில் அப்பால் அவர்களே அதுவாகலாம். இது விஷயத்தில் இளைஞர்கள் விழிப்போடிருக்கக் கோருகிறேன். வாலிபர்களும் பெரியவர்களுமே சேர்ந்து செய்யமுடியாத பெரிய காரியங்களையும் செய்து முடிக்க வல்லமையுமுள்ளது.

## பத்திரிகை.

பத்திரிகையென்பதை நீங்களனைவரும்அறிந்திருக்கலாம்.பெரியபெரிய இராஜாங்கங்களையும் பெரியோர்களையுங்கூட பத்திரிகைகளே நடத்துகிறதென்று சொல்லலாம். உலகத்தைப் புரட்டி விடக்கூடிய பலமான கலப்பைக்குள்ள சக்தி அதற்கிருந்து வருகிறதென்பது தற்காலமாறுதல்களிலிருந்து நன்கு தெரியவருகிறது. பதினெட்டாம் நூற்றாண்டில் ஐரோப்பாவின் புதிய மாறுதலின் புருஷ சிங்கமாகிய நெப்போலியன்கூட "நான் பீரங்கிவாய்க்குப் பயப்படேன்; பத்திரிகைவாய்க்கேபயப்படுவேன்" என்றனன். நம் தேசத்தில் தேசநலம், மதநலம், ஆசார ஒழுக்க நலம முதலிய பல நலங்களைப் பொதுவாகக் கருதக்கூடிய பொதுப் பத்திரிகைகள் பல விருக்கின்றன. அதோடு குல நலங்கருதும் பல பத்திரிகைகள் தோன்றியிருக்கின்றன. நம்குல நலங்கருதி யெழுந்த பல பத்திரிகைகள் சில தவிர மற்றவை ஆதரிப்பாரின்றி மறைந்துவிட்டன. சமூக விருத்திக்கு பத்திரிகை அவசியமென்ற உணர்ச்சி நமது ஜனங்களுக்குள்ளே சிறிதுண்டாகத்தான் சில பத்திரிகையேனும் நிலைபெற்றிருக்கின்றன. ஆனால் நம்முடைய முயற்சியளவில் அது வின்னும் விருத்தியாகவில்லை. பத்திரிகை வாசிக்கவேண்டுமென்ற உணர்ச்சி ஜனங்களுக்குள்ளே பரவப்பரவ சமூகம் விருத்திமுகங் காட்டுகிறதென்பதை நாம கண்டுகொள்ளலாம். ஆதியில் ஆதரிப்பாரின்றியே நம்முடைய பத்திரிகைகளெல்லாம் நசித்துப் போயிருக்கின்றன. ஏதோ கடவுள் கிருபையினாலே 'நாடார்குல மித்திரன்' எட்டாண்டுகளாக நிலைத்திருக்கிறது ஜனங்களுடைய ஆதரவு விரிவாக அதுவும் மலர்ந்து வருமென்று இவ்வெட்டுவருஷங்களின் அனுபோகத்தில் நீங்களே அறிந்திருக்கலாம். உங்களுடையவும் மற்ற நமது ஜனங்களுடையவும் பூரண ஆதரவு ஏற்படும் பட்சத்தில் இன்றே அது வாரமும்முறையாகவோ தினசரியாகவோ உங்கள் முன்வரக்கூடும். நமது சமூகத்திற்கு அவசியமென்று கருதுகிற ஸ்தாபனங்களிலெல்லாம் முக்கியமானது பத்திரிகையென்பதை நீங்கள் மறக்கலாகாது. மேலும் நமது சமூகத்திற்கு இரண்டு நேத்திரங்கள் போல் நாடார்மஹாஜன சங்கமும் நாடார்குல மித்திரனும் இருந்து வருகின்றனவென்பதை நான்சொல்லவேண்டியதில்லை. பத்திரிகை படிப்பதிலும் நடத்துவதிலும் சிறிது எனக்குள்ள அனுபவத்தினால் நான் இதை வற்புறுத்தி விரிவாய்க்கூற வேண்டியதாயிற்று. இக்குறைகளை நிவர்த்திக்க இளைஞர்கள் எழுந்தால் எல்லாம் நல்லதாய் முடியுமென்றே நம்புகிறேன்.

(தொடரும்.)

---

"பத்திரிகை
படியாதார்
பாதி
மனிதரேயாவர்"

---

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



ஸ்ரீ கோக்கோக மஹா முனிவர் அருளிச்செய்த அசல்

# சிந்தாமணி லேஹியம்

## (அயக்காந்த செந்தூரம்.)

நண்பர்களே! பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் டில்லியில் வசித்திருந்த பாதுஷாக்களும் இன்னும் மற்ற கனவான்களும் ஏக காலத்தில் அநேக மனைவியருடன் கூடி இல்லற இன்பத்தைப் பரிபூர்ணமாய் அனுபவித்து வந்தனரென்பது எங்கும் வெளிப்படை. ஆனால் அவர்களுக்கு அப்பேர்ப்பட்ட பலம் எங்கிருந்து வந்தது? நமக்கு அத்தகைய பலமும் தைரியமும் உண்டாகுமா என்றால் நிச்சயமாய் உண்டாகும். மனிதருடைய இச்சையை அடக்கவோ, அல்லது, அதை பெருகவைக்கவோ, நாம் விரும்பும் ஸ்திரீகளிடத்தில் நமக்குப் பரிபூரணமான இன்பம் கிடைக்கவோ அதாவது அவர்களை நாம் வசப்படுத்தவோ இன்னும் இவ்விதமான வழிகளை எல்லாம் பண்டை கொக்கோக சாஸ்திரத்தில் நமது நேயர்களில் சிலர் கண்டிருப்பது போலவே, மனிதன் எக்காலமும் தனது வீரியம் தளராதபடி ஸ்திரீயின்பத்தை எல்லையற்று அனுபவிப்பதற்கும் சில வைத்திய குறிப்புகளை வெளியிட்டு யிருக்கிறார். அவ்விதம் அந்த சாஸ்திரத்தில் நாம் காணும் எத்தனையோ குறிப்புக்களில் தாதுபுஷ்டி லேகியமும் ஒன்று. அவருடைய குறிப்புப்போலவே மேற்சொல்லப்பட்ட சிந்தாமணி லேகியத்தில் சரக்குகள் சேர்ந்திருப்பதுடன் இன்னும் 196 விதக் கடைச் சரக்குகளும் வித்துகளும், யூனானி மிஸ்ரிகளும், பொன் அம்பர், பாதம்பருப்பு, பிஸ்தா, அக்ரோட், சல்கூஜா பருப்புகளும், அவைகளுடன் மலை மூலிகைகளை கொண்டுவந்து இயந்திரத்தின் வாயிலாய் கொடுத்து அதன்மூலமாய் வரும் சஞ்சீவியின் சத்தை ஏராளமாகச் சேர்த்து பசு நெய், பசும்பால், மலைத்தேன் முதலியனவும் உதவாக்கி, கைபாகம் செய்பாகம் தவறாமல் செய்துள்ளோம். ஆகார விஷயத்தில் யாதும் நிர்ப்பந்தமில்லை. எல்லா காலத்திலும் எல்லா ஊரிலும் எந்த சீதோஷ்ண நிலைமையிலும் மேற்படி லேகிய செந்தூரத்தை சாப்பிடலாம். சாப்பிடுவதற்கும் வாய்க்கு அல்வாவைக்காட்டிலும் அதிக ருசியுள்ளதாயிருக்கும் என்பதையும் அறிவித்துக் கொள்ளுகிறோம். இதற்கு பத்தியம் இல்லை.



### இந்த லேகிய செந்தூரத்தை சாப்பிடுவதனால் உண்டாகும் குணங்கள்

1. நித்திரையிலும் பெண்களோடு பேசிக்கொண்டிருக்கும் போதும் நினைத்தபோதும் உண்டாகும் துரிதஸ்கலிதம் என்னும் கொடிய வியாதியை தலை யெடுக்கவொட்டாமல் அடித்துவிடும்.

2. தளர்ந்து துவண்டு மெதுவுபட்ட இராஜ கருவிகளாகிய நரம்புகளை முறுக்கேற்றி கெட்டிப்படுத்தி கைகால் இடுப்பு முதலியவைகளுக்கு அதிக பலத்தை கொடுத்து பெண்களிடத்தில் அபரிமிதமான பிரியத்தை தரும்.

3. கிழத் தன்மையைப் போக்கி இளமையைத் திருப்பித்தரும்.

4. சரீரமானது பத்தரை மாற்றுப் பசும் பொன்னைப் போல் பள பளப்பைத்தரும்.

5. ஞாபக சக்தியை அதிகப்படுத்தி இன்பரசத்தை ஊட்டும்.

6. இன்னும் மேக சம்பந்தமான குன்மங்கள், சூலை, அண்டவாதம், குடல்வாதம், ஆண், பெண் குறிகளில் உண்டாகும் மேகங்கள், பாரிசவாய்வு, ஓடு வாதம், அஜீரணம் முதலியவையும் காற்றாய்ப் பறந்து உடம்புக்கு சுகத்தைக் கொடுக்கும்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



நண்பர்களே! இந்த லேகியமானது 50-வருட காலமாய் இந்தியா, பர்மா, சிலோன் ஐக்கிய மலாய் நாடுகள், ஜாவா, மோரிஸ், நெட்டால் முதலிய பல தேசக்களில் நிகரற்றதென பிரசித்திப்பெற்றது. நூற்றுக்கணக்கான சுதேச வைத்தியர்கள், ராஜாக்கள், ஜமீன்தார்கள், லாயர்கள், தேசாபிமானிகள், ஸ்கூல் உபாத்தியாயர்கள், வர்த்தகர்கள், தலைமை கங்காணிமார்கள் முதலிய கனதனவான்கள் நமது லேகியத்தை புசித்து ஆயிரக்கணக்கான நற்சாட்சிப் பத்திரங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

உங்களுக்கு கொஞ்சமும் சந்தேகம் வேண்டாம். மேலே சொல்லப்பட்ட இரண்டு விஷயங்களிலும் உண்மையில்லை என்று நிரூபிக்கும் பட்சத்தில் ரூபாய் 2,000, ஈடு கொடுக்க என்றும் சித்தமாயிருக்கிறோம்.

ஒரு மண்டலம் 48-நாள் சாப்பிடக்கூடிய லேகிய செந்தூரம டப்பி ஒன்றுக்கு ரூபாய் 5-0-0. வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் முன்பணம் அனுப்பும்போது தபாற் செலவையும் சேர்த்து அனுப்பவேண்டுமென்று நிரம்பவும் தாழ்மையாய் கேட்டுக்கொள்ளுகிறோம்.

## ஸ்ரீ தனம் அண்டு கோ.,

பிரும்ம சமாஜ் கட்டடம்,

ஜார்ஜ் டவுன், மதருஸ்.

Kesari Printing Works, Madras.

## *Supplement to this issue.*

# இனும்! ரூ. 2,000 இனும்!!

எங்கள் லேஹியமானது ஸ்ரீ கொக்கோக மஹா முனிவரால் அருளிச்செய்த தாதுபுஷ்டி லேஹியமல்ல வென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1,000 இனுமாகக் கொடுக்கப்படும்.

ஒரு மண்டலம் என்னும் 48-நாள் இந்த லேஹியத்தை முறையோடு புசித்துக் கடைசியில் முன்னிருந்த எடையைக் காட்டிலும் 15 பவுண்டு எடை அதிகமாக ஒவ்வொருவரும் உண்டாகாவிட்டால் கண்டிப்பாக ரூ. 1,000 ஈடு கொடுக்கத் தயாராயிருக்கிறோம். [எப்படிப் பரிசோதிப்பதென்று கேட்பீராகில், லேஹியம் சாப்பிட ஆரம்பிப்பதற்கு முன்னர் உங்களுடைய சரீரம் எத்தனை பவுண்டு எடை இருக்கிறதென்று நிறுத்துக்கொள்ளுங்கள், பிறகு முறையோடு ஒரு நாள்கூடத் தவறாமல் காலையிலும் மாலையிலும் எங்கள் லேஹியத்தை 48-நாள் சாப்பிடுங்கள். 49-ம் நாள், முன் எந்த நிலைமையில் நீங்கள் உங்களுடைய சரீரத்தை எடைபோட்டுக் கொண்டீர்களோ அதே நிலைமையில் இப்பொழுதும் உங்களுடைய தேகம் எத்தனை பவுண்டு எடை இருக்கிறதென்று பாருங்கள். கண்டிப்பாகவும் கட்டாயமாகவும் 15 பவுண்டு எடை அதிகமாக இருப்பீர்கள். இது உண்மை. உண்மையில்லாவிட்டால் ரூ. 1,000 இதற்கு ஈடு கொடுக்கச் சித்தமாயிருக்கிறோம். வேடிக்கைப் பேச்சு என்றெண்ணிச் சும்மா இருந்துவிடவேண்டாம். உங்களுடைய தேகம் புஷ்டியடைய வேண்டுமானால் ஒரு மண்டலத்திற்குக் குறையாமல் எங்கள் லேஹியத்தைச் சாப்பிடுங்கள்.]